'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.




Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 232 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 01ஆம் திகதி திங்கட்கிழமை (15.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 24, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.50


## 2000 உணவுப் பார்சல்கள் ஓடர் : நம்பி ஏமாந்த புலனாய்வுத்துறை!

### கொழும்பு பாதுகாப்பின் பின்னணி

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமனம் பெறவுள்ளாரென்றும் அதற்காகவே கொழும்பில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் பரபரப்புத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அவ்வாறு பாதுகாப்பு...

02 பக்கம்

# புத்தர் சிலையால் திருமலையில் பதற்றம்!





*அப்துல் சலாம் யாசீம்*

திருகோணமலை, வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் புத்தர் சிலை உள்ளிட்ட பௌத்த சின்னங்களை நிறுவுவதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் நேற்று (14) இரண்டாவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அங்கு அத்துமீறிப் புகுந்த தேரர்களும் பொதுமக்களும் பிரித் ஓதி அனுட்டானங்களை மேற்கொண்டதால் பெரும் பதற்றம் நிலவியது.

இதன் காரணமாக பெருந்திரளான இராணுவத்தினரும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு திருகோணமலை நகர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்னால் வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்துக்கு சொந்தமான காணியில் பௌத்த சின்னங்களை நிறுவுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை (14) இரண்டாவது நாளாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்துக்கு சொந்தமான காணியில் தாய்லாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட...

02பக்கம்

## பிரான்ஸில் பாண் தயாரிப்பு; இலங்கைத் தமிழர் முதலிடம்



பிரான்ஸில் நடைபெற்ற மிகச் சிறந்த பாண் தயாரிப்பாளருக்கான போட்டியில் பிரான்ஸைச் சேர்ந்த இலங்கையரான தர்ஷன் செல்வராஜா முதலிடம் பெற்றுள்ளார்.

பிரான்ஸின் 'பகெட்' (Baguette)) எனும் நீளமான பாண், பிரசித்தமான ஓர் உணவாக விளங்குகிறது. பாரம்பரிய பகெட் என அடையாளப் படுத்தப்படக்கூடிய...

02 பக்கம்

## வவுனியா பூசகரிடம் பொலிஸ் விசாரணை

வவுனியா செய்தியாளர்

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பூசகரிடமும் அவரது மனைவியிடமும் நெடுங்கேணி பொலிஸார் நேற்றுமுன்தினம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அவர்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு வருகைதருமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அங்கு சென்ற பூசகரிடமும்...

02 பக்கம்

## கர்நாடகாவில் ஆட்சி அமைக்கும் காங்கிரஸ் 37 வருடங்களின் பின்னர் வெற்றி




10 பக்கம்

### கமெண்ட் கந்தர்...

இங்கே எண்டால் பாண் சாப்பிடுறதிலதான் தமிழர் முதலிடம் பாருங்கோ..!



## யுத்த நோக்கத்துக்கு பயன்படுத்த முடியாது

### ஹம்பாந்தோட்டை துறைமுகம் குறித்து அமைச்சர் நிமல் தெரிவிப்பு

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வர்த்தக நோக்கத்துக்கு மாத்திரமே தவிர யுத்தம் அல்லது பாதுகாப்பு தேவைகளுக்காக சீனாவுக்கு பயன்படுத்த முடியாதென துறைமுகங்கள், கப்பல், விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் நடைபெற்ற ஆறாவது சர்வதேச இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02 பக்கம்



மொரட்டுவ, ராவத்தாவத்தை ஸ்ரீ கருமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (14) கலந்துகொண்டார்.

### உஷ்



சம்பிக்க ரணவக்க தனது அரசியல் கட்சியின் ஆரம்ப விழாவை எதிர்வரும் 22ஆம் திகதி நடத்துகிறாராம். குடியரசுக் கட்சி என்பதே கட்சியின் பெயர் என்பதால் 22ஆம் திகதி குடியரசு தினத்தில் இதனை அறிவிக்கத் தீர்மானித்துள்ளார் சம்பிக்க. கட்சியின் சின்னம் பென்சில் என்பது மேலதிக தகவல்.




# கம்பளை யுவதியின் ஜனாஸா நல்லடக்கம்





*(கம்பளை செய்தியாளர்)*

கம்பளை, வெலிகல்ல, எல்பிட்டிய பிரதேசத்தில் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மீட்கப்பட்ட யுவதியின் ஜனாஸா நேற்று (14) மாலை 03 மணியளவில் எல்பிட்டிய ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

எல்பிட்டியவைச் சேர்ந்த பாத்திமா முனவ்வரா என்ற 22 வயதான யுவதியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. யுவதியின் சடலம் தொடர்பான மரண பரிசோதனைகள் கண்டி தேசிய வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டு நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில், யுவதியை கொலை செய்ததாக வாக்குமூலம் அளித்துள்ள சந்தேக நபரின் வீடும் அப்பகுதியில் அமைந்துள்ளதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சில மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல தடவைகள் மழை பெய்யும் எனவும்.

நாடு முழுவதும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கு 163.5 பில்லியன் ரூபா நட்டம்




ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு கடந்த 2022 ஆம் ஆண்டு 163.5 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கைகளில் தெரியவந்துள்ளது. அந்நிய செலாவணிகளின் பெறுமதி இழப்பு காரணமாகவே இவ்வாறு நட்டம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதிச் செலவுகள் மற்றும் பணப்பரிமாற்ற இழப்புகளுக்கு முன்னர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 1.69 பில்லியன் ரூபாவை இலாபமாக ஈட்டியது. எனினும் கடந்த கால இழப்புகள் அதிகமாக உள்ளதாக அந்நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# இலங்கைக்கு கடத்தவிருந்த கஞ்சா தூத்துக்குடி கடற்கரையில் மீட்பு

## அறுவர் கைது செய்யப்பட்டு விசாரணை

இலங்கைக்கு கடத்துவதற்காக தூத்துக்குடி கடற்கரைப் பகுதியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த இரண்டாயிரத்து 90 கிலோ கிராம் கஞ்சாவை மீட்ட தமிழக பொலிஸார் சந்தேகத்தின்பேரில் அறுவரை கைதுசெய்துள்ளனர். மேலும், அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மூன்று வாகனங்கள் ஆறு கையடக்கத் தொலைபேசி ஆகியனவும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

ஆந்திரா மாநிலத்தில் இருந்து தொடர்ச்சியாக கும்பல் ஒன்று திட்டமிட்டு தமிழகம், கேரளா மாநிலங்களுக்கு கஞ்சா கடத்திவந்து விற்பனை செய்துவருகிறது. இதனைத் தடுக்க பொலிஸார் தமிழகம் முழுவதும் கஞ்சா வேட்டை 4.0 என்ற பெயரிலான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இந்நிலையில் கஞ்சா போதைப்போருள் கடத்தலைத் தடுக்க தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்ட போது கஞ்சா வழக்குகளில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக இருந்த இருவரை பொலிஸார் தேடிவந்தனர்.

இதன்போது கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து கஞ்சா உள்ளிட்ட ஏனைய பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

### பிரான்ஸில்...

பாண் எப்படித் தயாரிக்கப்பட வேண்டும் என்பதற்கு 1993 ஆம் ஆண்டில் பிரான்ஸ் பாராளுமன்றம் சட்டமொன்றையே இயற்றியது.

பிரான்ஸ் இவ்வகையான மிகச் சிறந்த பாணை தயாரிப்பதற்கு வருடாந்தம் போட்டி நடத்தப்படுகிறது. இந்தப்போட்டியில் பங்கேற்று தர்ஷன் செல்வராஜா முதலிடம் பெற்றுள்ளார்.

இதில் 4,000 யூரோ பணப்பரிசுடன், பிரான்ஸ் ஜனாதிபதி மாளிகைக்கு ஒரு வருடகாலத்துக்கு பகெட் பாண் விநியோகிக்கும் உரிமையும் அவருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் சர்வதேச ஊடகங்களின் செய்திகளில் தர்ஷன் செல்வராஜா இடம்பெற்றுள்ளார்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தர்ஷன் செல்வராஜாவுக்கு 37 வயது. அவர் 15 வருடங்களாக பேக்கரி தொழிலில் ஈடுபட்டு வருவதுடன் பாரிஸின் 20 ஆம் வட்டாரத்தில் Au levain des Pyrénées எனும் பேக்கரியை நடத்தி வருகிறார்.

2023 ஆம் ஆண்டின் பாரிஸின் மிகச்சிறந்த பாண் தயாரிப்புப் போட்டி கடந்த புதன்கிழமை (10) இடம்பெற்றது.

இந்தப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்த ஏனைய 126 போட்டியாளர்களை வென்று தர்ஷன் செல்வராஜா முதலிடம் பெற்றுள்ளார். உண்மையில் 175 பேர் இதில் பங்குபற்றினர். ஆனால், 49 பேர் சமர்ப்பித்த பாணின் நீளம், எடை உரிய அளவில் இல்லாததால் அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

இப்போட்டிக்கு ஒவ்வொரு போட்டியாளரும் 2 பகெட் வகை பாண்களை சமர்ப்பிக்க வேண்டும். 55 முதல் 70 சென்ரிமீற்றர் நீளமும் 250 முதல் 300 கிராம் நிறையும் ஒரு கிலோவுக்கு 18 கிராம் என்ற அளவிலான உப்பு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

பேக்கரி தொழிற்றுறையினர், ஊடகவியலாளர்கள், முன்னாள் வெற்றியாளர்கள், பிரான்ஸ் பொதுமக்கள் ஆறு பேர் முதலானோர் அடங்கிய குழுவொன்றினால், பாணின் தயாரிப்பு, தோற்றம், சுவை, மணம், உள்ளமைப்பு முதலியன பரீட்சிக்கப்பட்டு, வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற போட்டியில் தர்ஷன் செல்வராஜா 4 ஆம் இடம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வருட போட்டியில் முதலிடம் பெற்ற தகவல் அறிவிக்கப்பட்டவுடன் தர்ஷன் செல்வராஜா ஆனந்தக்கண்ணீர் வடித்துள்ளார்.

இது தொடர்பாக ஏஎவ்பி செய்திச் சேவையிடம் அவர் பேசுகையில், நான் அழுதேன், ஏனெனில், நான் வெளிநாட்டவர்கள். பாரிம்பரிய பிரான்ஸ் பாண் தயாரிப்பது எப்படி என்பதை நாம் இங்கு வந்து கற்றுக்கொண்டோம். இப்பரிசை வென்றமைக்காக நான் மிக மகிழ்ச்சியடைகிறேன். எனது பாணை பிரான்ஸ் ஜனாதிபதி உட்கொள்வார் என்பது மிக மகிழ்ச்சியளிக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

தனது பாண்களை எப்போதும் அன்புடனும் புன்னகைத்து, சிரித்து, பாடிக்கொண்டும் தயாரிப்பதாகவும் தர்ஷன் செல்வராஜா கூறியுள்ளார்.

1993 ஆம் ஆண்டு பிரான்ஸ் பாராளுமன்றம் இயற்றிய பாரம்பரிய பகெட் என அடையாளப்படுத்தப்படும் பாண்கள். கோதுமை மா, தண்ணீர், உப்பு, ஈஸ்ட் ஆகியவற்றை மாத்திரமே பயன்படுத்தி கைகளால் தயாரிக்கப்பட வேண்டும். தயாரிக்கப்படும் இடத்திலேயே அவற்றை விற்பனை செய்ய வேண்டும்.

பகெட் பாணுக்கு உலக மரபுரிமை அந்தஸ்தை யுனெஸ்கோ நிறுவனம் கடந்த வருடம் நவம்பரில் அளித்திருந்தது.

### 2000 உணவுப்...

அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம் இப்போது வெளியாகியுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழக பழைய மாணவர் ஒன்றுகூடலுக்காக 2,000 உணவுப் பொதிகளுக்கு முன்பதிவு செய்யப்பட்டதை தவறாக புரிந்து கொண்டதே கொழும்பில் திடீர் பாதுகாப்பு அதிகரிப்புக்கு காரணமென தெரியவந்துள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகம், காலிமுகத்திடல், தும்முல்லை சந்தி உள்ளிட்ட பல பகுதிகளில் வெள்ளிக்கிழமை முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பொலிஸார், ஆயுதம் ஏந்திய இராணுவம், விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டிருந்தனர்.

உளவுத்தகவல் ஒன்றினடிப்படையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் முன்னர் தெரிவித்திருந்தார். அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், வார இறுதியில் கொழும்பு நகரில் திடீர் முற்றுகையில் ஈடுபட்டு, அரச நிறுவனங்களை கையகப்படுத்தி, புதிய போராட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இதில் 750 பேர் வரையில் பங்கேற்பார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டதாக தெரியவந்தது.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர் தரப்பினர், 2000 உணவுப் பொதிக்கு முன்பதிவு செய்திருந்த தகவலை உளவுத்துறை பெற்றதைத் தொடர்ந்தே, இந்த புலனாய்வுத் தகவல் வெளியிடப்பட்டதாக தெரியவந்துள்ளது.

சனிக்கிழமை பழைய மாணவர் ஒன்றுகூடல் நடைபெற்றதாகவும் அதற்காக இந்த உணவுப் பொதிகள் முன்பதிவு செய்யப்பட்டதாகவும் அதனை போராட்ட முன்னேற்பாடு என பாதுகாப்பு தரப்பு நினைத்து விட்டதாகவும் இப்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் கீழ் இயங்கும் விசேட புலனாய்வுப் பிரிவு ஒன்றே இந்த தகவலை வழங்கியதாகவும் அதனடிப்படையில் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிகிறது. அடிப்படையற்ற புலனாய்வுத் தகவல்களால் பாதுகாப்புத் தரப்பினரை அலைக்கழித்தமை, அவர்களுக்கான போக்குவரத்து செலவு உட்பட்ட விடயங்களால் இது தொடர்பில் ஜனாதிபதி கடும் அதிருப்தி கொண்டுள்ளதாக மேலும் அறியமுடிந்தது.

### புத்தர்...





பௌத்த சின்னங்களை நிறுவுவதற்கு பௌத்த தேரர்களால் நேற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதனையறிந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையிலான கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலையில் பௌத்த சின்னங்களை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்ட காணிக்கு முன்பாக ஒன்றிணைந்து போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமிழ் உரிமைக்கு குண்டுகள் தீர்வாகாது, எமது நிலம் எமக்கு வேண்டும், மண்துறந்த புத்தருக்கு தமிழர் மண்மீது ஆசையா?, திருமலை எங்கள் நகரம், ஆக்கிரமிப்புக்கு அடிபணியோம், வடக்கும் கிழக்கும் தமிழ் தாயகம் போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தி கோஷங்கள் எழுப்பியவாறு சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் பிற்பகல் 2 மணிவரை முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்து அந்த பகுதியில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல்வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் ஒன்றுகூடிய பௌத்த தேரர்கள் தலைமையிலான குழுவினர் நெல்சன் தியேட்டருக்கு முன்னால் உள்ள கந்தசுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான காணிக்குள் அத்துமீறி நுழைந்து சமய அனுட்டானங்களை மேற்கொண்டனர்.

தமிழ் மக்கள் அங்கு போராட்டம் நடத்தி விலகிச் செல்லத் தயாரானபோது இவ்வாறு பெருந்திரளான மக்கள் அப்பகுதிக்கு திரண்டு வந்தனர். இந்நிலையில் அசாதாரண சூழ்நிலையை தவிர்க்கும்பொருட்டு போராட்டம் நடத்தியோர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

தேரர்கள் தலைமையில் அத்துமீறி உள்நுழைய முற்பட்டோரை தடுப்பதற்கு பொலிஸார் கடும் பிரயத்தனம் மேற்கொண்டனர். எனினும் அதனை மீறி அவர்கள் காணிக்குள் நுழைந்து மத அனுட்டானங்களை மேற்கொள்ளத் தொடங்கியதுடன் அரச மரத்தடியிலும் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

தாய்லாந்திலிருந்து வந்திருக்கும் பௌத்த தேரர்கள் நெல்சன் தியேட்டருக்கு முன்னுள்ள அரச மரத்தடிக்கு வந்து புத்தர் சிலையொன்றை வைத்து வழிபட்டு பிரித் ஓதி அங்கிருந்து கண்டிக்கு பாதயாத்திரை செய்வதாக திட்டமிடப்பட்டிருந்த நிலையில் மேற்படி நிகழ்வை இந்து ஆலயமான வில்லூன்றி கந்தசுவாமி கோவிலுக்கு சொந்தமான இடத்தில் மேற்கொள்ள வேண்டாமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் மற்றும் பொது அமைப்புகள், இந்து அமைப்புகள் கோரியதற்கு அமைய மேற்படி பௌத்த வழிபாடு வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெயவிக்கிரம ஏற்கனவே வாக்குறுதி அளித்திருந்தார்.

அவ்வாறான சூழ்நிலையிலேயே குறித்த இடத்தை சுற்றி பறக்கவிடப்பட்டிருக்கும் கொடிகளை அகற்றவேண்டுமென்ற கோரிக்கை கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தியவர்களால் விடுக்கப்பட்டிருந்தது.

அங்கு கொடிகள் அகற்றாத நிலையில் போராட்டக்காரர்கள் சம்பவம் இடம்பெற திட்டமிடப்பட்ட நேரம் வரை தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தியதன் பின்னர் பெரும்பான்மைத் தரப்பினர் மணிக்கூட்டு கோபுரத்தடியிலிருந்து ஊர்வலமாக வந்து அத்துமீறி நுழைந்ததுடன் தியேட்டருக்கு முன்னுள்ள அரசமரமொன்றின் கீழ் வழிபாடுகளை மேற்கொண்டு பௌத்த கொடிகளை மரத்தைச் சுற்றி கட்டி விட்டு சென்றுள்ளனர்.

இதேவேளை தாய்லாந்திலிருந்து வந்த பௌத்த தேரர்கள் கப்பல் வழியாக திருகோணமலை துறைமுகப் பகுதிக்கு வந்து அங்கிருந்து கண்டிக்கு பாதயாத்திரையை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### வவுனியா...

அவரது மனைவியிடமும் பல்வேறு கேள்விகளை பொலிஸார் தொடுத்துள்ளனர்.

2019 ஆம் ஆண்டு வெடுக்குநாறிமலையில் ஏணிப்படியை வைத்தது யார் அதற்கு நிதி வழங்கியது யார் போன்ற கேள்விகளை கேட்டுள்ளதுடன் சுமார் மூன்று மணி நேரம் விசாரணை இடம்பெற்றுள்ளது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சங்காபிஷேகம் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பூசகரும் நிர்வாக சபை உறுப்பினரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்தவாரம் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே பூசகரும் அவரது மனைவியும் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை ஆலய நிர்வாக சபையின் போசகரையும் பொலிஸார் விசாரணைக்காக அழைத்துள்ளனர். மேலும், சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் ஆறுதிருமுருகனிடம் யாழில் வைத்து நெடுங்கேணி பொலிஸார் நேற்று முன்தினம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு புதிதாக வழங்கிய விக்கிரகங்கள் தொடர்பாக குறித்த விசாரணை இடம்பெற்றுள்ளது.

எங்கள் மீதான விசாரணைகளே தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் ஆலய விக்கிரகங்கள் உடைத்தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எந்த சந்தேக நபர்களையும் நெடுங்கேணி பொலிஸார் கைது செய்யவில்லை. எந்த விசாரணையும் செய்யவில்லை என்று ஆலய நிர்வாகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

### யுத்த நோக்கத்துக்கு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாங்கள் இந்தியாவுடன் சிறந்த உறவைக் கொண்டுள்ளோம். இந்தியா உதவி செய்து வருகிறது. நாங்கள் இந்தியாவில் இருந்து எங்கள் விமான நிலையங்களுக்கு விமான சேவைகளைத் தொடங்கியுள்ளோம். இரு நாடுகளுக்கிடையிலான படகுச் சேவைகளையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்தியாவின் பாதுகாப்பு குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும். எங்களிடம் மிகவும் நட்பு ரீதியான உறவு உள்ளது. இலங்கையின் எரிசக்தி துறையை கட்டியெழுப்புவதற்கு புதுடில்லி உதவுகிறது. "ஹம்பாந்தோட்டையை விற்க வேண்டியிருந்தது. இந்தியாவைப் பெற்றுக்கொள்ளுமாறு சொன்னோம், அமெரிக்காவுக்கும் கூறினோம். பிறகு சீனா அதைப் பெற்றுக்கொண்டது. இது ஒரு தனியார் துறையாகும். ஏனைய நோக்கங்களுக்காக அது பயன்படுத்தப்படுவதில்லை. எந்தவொரு போர் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட முடியாது. வர்த்தகத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாக உள்ளது என்றார்.




# மாணவர்களின் சத்துணவு திட்டத்தில் முறைகேடு; பாடசாலைகள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்படும்!

## வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



வட மாகாண பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற சத்துணவு திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாக வடமாகாண கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அ.உமா மகேஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாண பாடசாலைகளில் மதிய நேர சத்துணவு திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாக குற்றச்சாட்டுகள் எழும் நிலையில், அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்படும் மதிய நேர சத்துணவு திட்டத்தில் சில பாடசாலைகளில் முறைகேடுகள் இடம் பெறுவது தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தீவக வலயப் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சத்துணவு திட்டத்தில் முறைகேடு இடம்பெற்றமை தொடர்பில் ஆதாரங்களுடன் எமக்கு முறைப்பாடு கிடைத்தது.

குறித்த பாடசாலையின் அதிபர் மாணவர்களுக்காக வழங்கப்படும் சத்துணவு நிதியை முறைகேடாக கையாண்டமை தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அது மட்டுமல்லாது, மேலும் சில பாடசாலைகள் தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ள நிலையில், முறைப்பாடுகளை வழங்கியவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி ஆதாரங்களை பெற்றுக்கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவுத் திட்டத்தை கண்காணிப்பதற்கும் சோதனை இடுவதற்கும் விசேட குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுத் திட்டம் தொடர்பில் பாடசாலைகளுக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டு அறிக்கை இடுவார்கள்.

ஆகவே, அரசாங்கத்தினால் பாரிய நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படும் சத்துணவு திட்டத்தின் நோக்கம் உரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டுமே அல்லாமல் முறைகேடுகளுக்கு அனுமதிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# அவுஸ்திரேலியாவிடமிருந்து இலங்கைக்கு விமானம் அன்பளிப்பு



அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் அந்நாட்டு அரச விமானப்படைக்குச் சொந்தமான பீச் கிராப்ட் "KA350 King Air" விமானம் ஒன்றை (பதிவிலக்கம் - A32-673) இலங்கைக்கு அன்பளிப்புச் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் வழங்குவது தொடர்பாக அவுஸ்திரேலிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கிளேர் ஓ நீல் (Clare O'Neil) அளித்த கடிதம், இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பவுல் ஸ்டெபன் இனால், அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

பீச் கிராப்ட் "KA350 King Air" என்பது நவீன இரட்டை எஞ்சின் கொண்ட turboprop விமானம் ஆகும்.

இந்த அன்பளிப்பு இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் திறனை மேம்படுத்தும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச குற்றச்செயல்களை எதிர்த்துப் போராடுவதில் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பை இது உறுதிப்படுத்துவதுடன், கடல் மார்க்கமாக இடம்பெறும் மனிதக் கடத்தலை எதிர்க்கும் செயல்முறைக்கு பரந்த பங்களிப்பை வழங்க முடியும்.

கடல்சார் குற்றங்களுக்கு எதிராக இலங்கை வழங்கும் ஆதரவை அவுஸ்திரேலிய அரசாங்கம் மிகவும் பாராட்டுவதாகவும் ஆட்கடத்தல் செயல்பாடுகளை குறிப்பிடத்தக்க அளவில் மட்டுப்படுத்துவதற்கும் கடல் கொள்ளை மற்றும் பாதுகாப்பற்ற கடற் பிரயாணங்களிலிருந்து மக்களை பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இரு நாடுகளுக்கிடையேயான இந்த ஒத்துழைப்பு வேலைத்திட்டம், காரணமாக அமைந்துள்ளதாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி விமான செயற்பாடுகள் குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கம் 12 மாத காலம் இலங்கைக்கு உதவிகளை வழங்கவுள்ளதோடு, அதன் பின்னர் அதன் பொறுப்புகள் இலங்கை அரசாங்கத்துக்கு கையளிக்கப்படும். அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர், முதன்மைச் செயலாளர் பிரெட் செஹண்டர் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் இயன் கேன் உள்ளிட்டவர்களும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 01ஆம் நாள் திங்கட்கிழமை

மேஷம்: தொழில், வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்திருந்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பாராத பயணங்களால் விரயங்கள் உண்டு.

ரிஷபம்: புதிய தொழில் முயற்சிகளால் அதிக இலாபங்களை அடைவீர்கள், எதிர்பாராத தன அதிர்ஷ்டங்கள் உண்டு.

மிதுனம்: தடைப்பட்டிருந்த பயணங்கள் இன்று நல்லபடியாகக் கை கொடுக்கும். தொழில் வகையில் அதிக பாராட்டுகளைப் பெறும் நாள்.

கடகம்: காலை வேளையில் திட்டமிட்டு எதையும் ஆரம்பிக்காதீர்கள். கோபத்தால் புத்தி தடுமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

சிம்மம்: கூட்டுறவால் தொல்லைகள் உருவாகலாம், பணியிடத்தில் குறை கேட்க நேரிடலாம். வீண் வாதம் வம்பில் முடியும்.

கன்னி: உடல் நோயால் தொந்தரவுகள் ஏற்படலாம். அல்லது மறைமுக எதிரிகளின் தொல்லைகளுக்கு ஆளாவீர்கள்.

துலாம்: திடீர் அதிர்ஷ்டம் மற்றும் போட்டி இலாபங்களால் மன நிறைவு கொள்வீர்கள். பிள்ளைகளின் தேவைக்காக கடன் வாங்குவீர்கள்

விருச்சிகம்: உறவினர், நண்பர்களின் பூரண ஆதரவோடு காரியங்களைச் சாதிப்பீர்கள். வீட்டுக்கான செலவுகள் உண்டு.

தனுசு: குடும்பத்தின் மகிழ்ச்சியே முக்கியம் என கருதி அதற்கான திட்டங்களைத் தீட்டுவீர்கள். தைரியமாக செயற்படுவீர்கள்.

மகரம்: காலையில் இருந்த குழப்ப நிலை மாலையில் இருக்காது. எப்படியாவது இன்று உங்கள் காரியங்களை சாதித்து விடுவீர்கள்.

கும்பம்: உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டால் வெற்றி நிச்சயம் உண்டு. காரியத்தடைகளை எப்படியாவது சமாளித்து விடுவீர்கள்.

மீனம்: நண்பர்களின் சந்திப்பால் அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். முக்கிய காரிய நிமித்தம் செலவுகளை செய்ய வேண்டிய கட்டாயம்.

திதி : ஏகாதசி பி.இ. 1.03 வரை பின் துவாதசி (தேய்)
நட்சத்திரம் : பூரட்டாதி மு.ப.9.08 வரை பின் உத்தரட்டாதி
யோகம் : மரண யோகம் முழுவதும்
வார சூலம் : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
நல்ல நேரம் : பி.ப. 11.53 – 12.23 மணி வரை
ராகு காலம் :7.23 – 8.53 மணிவரை
எமகண்டம் :10.23 – 11.53 மணிவரை
குளிகை :1.23 – 2.53 மணிவரை
சந்திராஷ்டமம் :கடக-சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
தன அதிர்ஷ்டம் : பூனர்பூசம், விசாகம், பூரட்டாதி (பிறந்தவர்களுக்கு)
விஷேட தினம் : ஏகாதசி விரதம்

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# சீனிப்பாணியை காய்ச்சி தேன் என விற்பனை செய்தவர் கைது

## வவுனியாவில் 263 போத்தல்கள் மீட்பு





வவுனியாவில் சீனிப்பாணியினை காய்ச்சி தேன் என விற்பனை செய்த நபரை சுகாதாரப் பிரிவினர் கைதுசெய்துள்ளதுடன் அவரிடமிருந்து 263 போத்தல் சீனிப்பாணியினையும் மீட்டுள்ளனர்.

தேன் என சீனிப்பாணியினை விற்பனை செய்கின்றமை தொடர்பில் வவுனியா சுகாதாரப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பொது சுகாதார பரிசோதகர்களான தா.வாகீசன், த.சிவரஞ்சன், அ.விதுசன், ஞா.ஞானப்பிரதாப், ர.கிஷோஷான் ஆகியோர் வேப்பங்குளம் 8ஆம் ஒழுங்கை ஊர்மிளாகோட்டம் பகுதியிலுள்ள குறித்த வீட்டினை சுற்றிவளைத்தனர்.

இதன்போது குறித்த வீட்டில் விற்பனைக்கு தயாரான முறையில் காணப்பட்ட 263 போத்தல்களில் அடைக்கப்பட்ட சீனிப்பாணியினை சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றியதுடன் சீனிப்பாணி தயாரிக்க பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் கைப்பற்றினர்.

சந்தேகநபர் மற்றும் கைப்பற்றப்பட்ட 263 போத்தல்களில் (750மில்லிலீற்றர் போத்தல்) அடைக்கப்பட்ட சீனிப்பாணி பொருட்கள் என்பன வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது சந்தேகநபரை ஒரு இலட்சம் ரூபா சீரப் பிணையில் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

# தையிட்டி விகாரைக்கு ஆதரவு தெரிவித்து பேரணி முன்னெடுப்பு



தையிட்டி விகாரைக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாண சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (13) பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு ஆதரவு தெரிவித்து, அனைத்து மதங்களையும் ஒன்றாக மதிக்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் இப்பேரணி தையிட்டி சந்தியிலிருந்து விகாரை வரை முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பூஜை வழிபாடுகள் மற்றும் மக்களுக்கான மதிய அன்னதானமும் இடம்பெற்றது.

இப்பேரணியில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் விகாரைக்கு ஆதரவு தெரிவித்து பதாதைகளை தாங்கியவாறு நின்றனர்.

# கைவிடப்பட்ட வீட்டில் தனிமையில் இருந்தவர் வெட்டிக் கொலை!

முதுன்கொட பிரதேசத்தில் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் தனிமையில் உறங்கிக் கொண்டிருந்த 32 வயதுடைய நபரொருவர் ஒரு குழுவினரால் கோடரியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஹுரிகஸ்வெவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை (14) இடம்பெற்றுள்ளது. முதுன்கொட ஹுரிகஸ்வெவ பிரதேசத்தில் வசிக்கும் துசித குமார (32) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் அப்பகுதியில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த கொலை தொடர்பாக, அந்த பகுதியை சேர்ந்த இருவர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹுரிகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச சேவையில் இன்று முதல் விரல் அடையாளம் கட்டாயம்

அனைத்து அரச ஊழியர்களும் இன்று திங்கட்கிழமை (15) முதல் சேவைக்கு வருகை தருவது மற்றும் சேவை முடிந்து வெளியேறிச் செல்வதை பதிவிடுவதற்காக விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது கட்டாயமாகி இருப்பதாக பொது நிர்வாக செயலாளர் ரஞ்ஜித் அசோக்க தெரிவித்தார்.

அரச ஊழியர்கள் சேவைக்கு வருவது, சேவை முடிந்து செல்லும்போது விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து அரச ஊழியர்களும் தங்களின் சேவை நிலையங்களுக்கு வருகை தருதல் மற்றும் சேவை முடிந்து வெளியேறிச் செல்வதை பதிவிடுவதற்காக விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை முதல் இந்நடவடிக்கை அமுலுக்கு வரவுள்ளது.

அத்துடன் விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது தொடர்பான சுற்று நிருபத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். அதன் பிரகாரம், 2021.10.01ஆம் திகதிய 02/2021 (ம) இன் 7ஆவது பந்தியின் ஏற்பாடுகள் இன்று முதல் செயற்படுத்தப்படுவதாக சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுவதற்கு அனைத்து நிறுவன தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குறித்த சுற்று நிருபம் அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாகாண செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன என்றார்.

# 2023 வாக்காளர் பட்டியலை திருத்தும் தகவல்களை சேகரிக்கும் கிராமசேவகர்கள்

2023ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை திருத்தும் நோக்கத்தில் கிராமசேவகர்கள் வீடு வீடாகச் சென்று தகவல்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கொவிட் தொற்று நிலைமை மற்றும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக, வீடு வீடாகச் சென்று தகவல் சேகரிப்பதை நிறுத்த கிராம சேவகர்கள் ஏற்கனவே முடிவு செய்திருந்தனர். எனினும் இம்முறை கிராம சேவகர்கள் வீடு வீடாக சென்று தகவல்களை சேகரிக்க ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கிராம சேவகர்கள் வீடுகளுக்குச் செல்லும்போது பொதுமக்கள் வீட்டில் இல்லை என்றால், உடனடியாக கிராம சேவகர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு மக்களுக்குத் தெரிவிக்கிறது. அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் அதற்காக இம்முறை வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் பெயர் இடம்பெறுவது மிகவும் முக்கியமானது எனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. ஒக்டோபர் 31ஆம் திகதிக்குள் வாக்காளர் பதிவுப் பணியை முடிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# ஜேர்மனியிலிருந்து அனுப்பப்பட்ட காசுக்காக யாழில் வாள்வெட்டு

## ரிக்ரொக்கில் வீடியோ பதிவிட்ட கூலிப்படைக்கு விளக்கமறியல்

நெல்லியடி, அத்தாய் பகுதியில் ஒருவரை வாள், கோடரி, கொட்டன்களால் தாக்கி வீடியோ எடுத்து, ரிக்ரொக்கில் பதிவிட்ட 9 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதவான் ந.ரஜீவன் சனிக்கிழமை (13) உத்தரவிட்டார்.

கடந்த 10 நாட்களாக தலைமறைவாக இருந்த 8 பேர், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். நெல்லியடி பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அத்தாய் பகுதியைச் சேர்ந்த 54 வயதான ஒருவரே தாக்கப்பட்டார்.

அந்த பகுதியில் வன்முறை குழுக்கள் தொடர்ந்து அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் அடிக்கடி மோதல்கள் நடக்கின்றன. இந்த சம்பவம் முன்பகை அடிப்படையில் நடந்துள்ளது.

நபர் ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் முன்னிலையாக சென்றபோதே, வன்முறை கும்பல் அவரை வழிமறித்து தாக்குதல் நடந்தியது.

அவரை அடித்து விழுத்தி, கத்தி மற்றும் கோடரியால் வெட்டியதுடன், கொட்டனால் அடித்துமுள்ளனர். இதை ஒருவர் வீடியோ எடுத்தார்.

காயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தாக்குதல் பற்றி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தாக்குதல்தாரிகள் தலைமறைவாக இருந்த நிலையில், காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் 8 பேர் கைது செய்யப்பட்டனர். நெல்லியடி பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைதான 6 பேர் அத்தாய் பகுதியை சேர்ந்தவர்கள். 3 பேர் இராஜகிராமத்தை சேர்ந்தவர்கள். 18- 25 வயதுக்குட்பட்டவர்கள்.

தாக்கப்பட்டவருக்கும், ஜேர்மனியில் உள்ள ஒருவருக்குமிடையில் முன்பகை உள்ளதாகவும் ஜேர்மனி நபர் அனுப்பிய பணத்துக்காக இவர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் கைதானவர்கள் தெரிவித்தனர்.

கைதான ஒருவரின் கையடக்க தொலைபேசியில், தாக்குதல் சம்பவம் பற்றிய வீடியோ காணப்பட்டது. அதை ரிக்ரொக்கிலும் அவர் பதிவிட்டுள்ளார்.







கொழும்பு மொரட்டுவ ராவத்தாவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பிரதம அதிதியாக நேற்று (14) கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, மனோ கணேசன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.


## பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு 320/N மஸ்கெலியா புரவுன்லோ தோட்டத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் லூசின் அர்ஷாட் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை பாலசுப்பிரமணியம் சுரேஷ்குமார் என மாற்றி உள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

ஒப்பம்
பாலசுப்பிரமணியம். சுரேஷ்குமார்

## வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 15ஆம் திகதி, திங்கட்கிழமை**

## கர்நாடகத் தேர்தல் முடிவு சொல்வதென்ன?

நடந்து முடிந்திருக்கும் கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலில் இந்திய மத்தியில் ஆளும் பா.ஜ.க. பெரும் தோல்வியைச் சந்தித்திருக்கிறது. மொத்தமுள்ள 224 இடங்களில் 66 இடங்களையே அக்கட்சியால் பெற முடிந்திருக்கிறது. பா.ஜ.க. அடைந்த இந்தத் தோல்வியின் மூலம் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் அந்தக் கட்சி ஆட்சியில் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் தோல்வியால் தென்னிந்தியாவிலிருந்தே பா.ஜ.க. இல்லாமல் போய்விட்டதா என்றால், நிச்சயமாக இல்லை என்பதுதான் பதில். கர்நாடக மாநிலத்தில் பல தசாப்தங்களாக கட்சிகள் மாறிமாறி ஆட்சிக்கு வரும் நிலையில், இது காங்கிரஸின் முறை என்றுகூட இந்த வெற்றியைப் பார்க்க முடியும். இருந்தாலும், இந்த முறை பா.ஜ.க. அடைந்திருக்கும் தோல்வி மிகுந்த அரசியல் முக்கியத்துவமுடையதாகப் பார்க்கப்பட பல காரணங்கள் இருக்கின்றன.

2023ஆம் ஆண்டின் கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை, இந்தத் தேர்தல் காங்கிரஸுக்கு எவ்வளவு முக்கியமான தேர்தலோ, அதே அளவுக்கு பா.ஜ.கவுக்கும் முக்கியமான தேர்தல்தான்.

காங்கிரஸைப் பொறுத்தவரை, 2024ஆம் ஆண்டு தேர்தலை ஊக்கத்துடன் எதிர்கொள்ள, கர்நாடக மாநிலத் தேர்தல் வெற்றி என்பது மிக அவசியமான ஒன்றாக இருந்தது. பா.ஜ.கவைப் பொறுத்தவரை, 'ஹிந்தி பேசும் மாநிலங்களுக்கான கட்சி' என்ற பெயரை உடைப்பதற்கு கர்நாடகத்தில் இருந்த ஆட்சி உதவிகரமாக இருந்தது. ஆகவே, அதைத் தக்கவைக்க அந்தக் கட்சி விரும்பியது. ஆனால், இந்தத் தோல்வியால், பா.ஜ.கவை மீண்டும் ஒரு வட இந்தியக் கட்சியாக தென்னிந்தியாவில் உள்ள மாநிலக் கட்சிகளும், காங்கிரஸும் சித்தரிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னிந்தியாவில் பா.ஜ.க. வலுவாக இருந்த ஒரே மாநிலம் கர்நாடகம்தான். மற்ற மாநிலங்களில் கட்சியின் நிலை சொல்லிக்கொள்ளும் வகையில் இல்லை. கேரள மாநிலத்தில் 2016இல் ஓர் இடத்தைப் பெற்ற பா.ஜ.க. 2021இல் அதையும் இழந்தது. தமிழ்நாட்டில் இரு தசாப்தங்களுக்குப் பிறகு, அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்ததன் மூலம் நான்கு இடங்களைப் பெற்றுள்ளது அந்தக் கட்சி.

தெலுங்கானாவில் 2014இல் ஐந்து இடங்களைப் பெற்ற அந்தக் கட்சி, 2018இல் ஓர் இடத்தை மட்டுமே பெற முடிந்தது. இடைத்தேர்தல்களில் பெற்ற வெற்றியின் மூலம் இந்த எண்ணிக்கை மூன்றாக உயர்ந்தது. 2019இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் நான்கு மக்களவைத் தொகுதிகளைப் பெற்றது.

தெலுங்கானாவில் எதிர்வரும் டிசம்பர் மாதம் சட்டமன்றத் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தெலுங்கானாவில் நான்கு இடங்களைப் பிடித்த பா.ஜ.க. இந்த சட்டமன்றத் தேர்தலில் கணிசமான இடங்களை வெல்ல நினைக்கிறது. ஆனால், கெட்ட செய்தி என்னவென்றால், அங்கு பா.ஜ.கவுக்கென வலுவான தலைவர்களோ, வேட்பாளர்களோ கிடையாது என்பதுதான். பா.ஜ.கவின் சார்பில் இடைத்தேர்தலில் வென்றவர்கள் கூட, தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதியிலிருந்து பா.ஜ.கவுக்கு வந்தவர்கள்தான்.

ஆகவே, கர்நாடகத் தேர்தல்களில் பெரும் வெற்றி கிடைத்தால் காங்கிரஸிலிருந்தும் பாரதீய ராஷ்ட்ரிய சமிதியிலிருந்தும் பெரும் எண்ணிக்கையில் ஆட்களும், நிர்வாகிகளும் பா.ஜ.கவுக்கு வருவார்கள் - காங்கிரஸ் நொறுங்கிப்போகும் என்று கணக்குப் போட்டிருந்தது அக்கட்சி. ஆளும் கட்சியாக வரமுடியாவிட்டால் கூட, இரண்டாம் இடத்திற்கு வரலாம் என நினைத்தது. ஆனால், இப்போது எல்லாம் தலைகீழாகிவிட்டது. எனவே, தெலுங்கானாவில் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வது அக்கட்சிக்கு மிகப் பெரிய சவாலாகத்தான் இருக்கும்.

மேலும், தெலுங்கானா மாநிலத் தேர்தல் பொறுப்பாளராக பிரியங்கா காந்தி நியமிக்கப்பட்டு, காங்கிரஸ் கட்சிப் பணிகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதும் பா.ஜ.கவுக்கு பாதகமான நிலையை ஏற்படுத்தும். ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரை, 2014இல் நான்கு இடங்களைப் பெற்ற பா.ஜ.க., 2019இல் ஓர் இடத்தையும் பெற முடியவில்லை. இந்தப் பின்னணியில்தான் தற்போது கர்நாடக மாநிலத்தில் கிடைத்திருக்கும் தோல்வியைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கர்நாடக மாநிலத்தில் மொத்தமுள்ள 28 தொகுதிகளில் 24 தொகுதிகளை பா.ஜ.க. கைப்பற்றியது. ஆகவே, மக்களவைத் தேர்தலுக்கான பா.ஜ.கவின் கணக்குகளில் கர்நாடகத்திற்கு மிக முக்கியமான இடம் இருக்கிறது. ஆனால், இந்தச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் மக்களவைத் தேர்தலிலும் எதிரொலிக்குமா என்பது தெரியாது. ஆனால், தன்னை ஒரு தோற்கடிக்க முடியாத கட்சியாக முன்னிறுத்திக்கொண்ட பா.ஜ.கவுக்கு நிச்சயம் இது ஒரு பின்னடைவுதான்.

பிஹார், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் கூட்டணிகள் முறிந்துபோயுள்ள நிலையில், தென்னிந்தியாவில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இடங்களைப் பெற பா.ஜ.க. விரும்பும். தென்னிந்தியாவில் உள்ள 140 பாராளுமன்ற இடங்களில் தற்போது 28 (கர்நாடகத்தில் 24, தெலுங்கானாவில் 4) இடங்கள் அக்கட்சிக்கு உள்ளன. 2024ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்த 28 இடங்களைத் தக்கவைப்பதே அக்கட்சிக்குப் பெரும்பாடாக இருக்கும்.

ஆனால், இவையெல்லாவற்றையும்விட பெரிய சவால் என்பது, தேசிய அளவில் பா.ஜ.க. குறித்த பார்வையில் ஏற்படவிருக்கும் தாக்கம்தான் அந்தக் கட்சியை மிகவும் வருத்தும். தென்னிந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஆட்சியில் இல்லாத நிலையில், மீண்டும் அது ஒரு ஹிந்தி பேசும் மாநிலங்களுக்கான கட்சி எனப் பலர் விமர்சிக்க இந்தத் தோல்வி வழிவகுக்கும்.

இராமர் கோவில், இஸ்லாமியர்கள் மீதான வெறுப்பு, மதரீதியான கோஷங்கள் ஆகியவற்றையே முக்கிய பிரச்சினைகளாக முன்வைத்து, நரேந்திர மோடி என்ற தலைவரை மட்டும் முன்னிறுத்தி நாடு முழுவதும் தேர்தலை எதிர்கொண்டுவரும் பா.ஜ.க., இந்தத் தேர்தல் தோல்விக்குப் பிறகு தனது பாணியை மறுபரிசீலனை செய்யலாம். இந்தியாவின் பல்வேறு பகுதிகளின் பிரச்சினைகள் வெவ்வேறானவை. அந்தப் பகுதிகள் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் விதங்களும் வெவ்வேறானவை. ஒரே விதமான அணுகுமுறையும் யாருடைய கோரிக்கைகளுக்கும் காது கொடுக்காத பிரம்மாண்ட பிரசாரங்களும் தென்னிந்தியாவில் பலனளிக்காது என்பதை அந்தக் கட்சி விரைவில் உணரக்கூடும்.

ராகுல் காந்தியின் நாடாளுமன்ற எம்.பி. பதவி பறிக்கப்படும் என்ற செய்தி வந்த கையோடு, அவரை அரியணை ஏற்ற பிள்ளையார் சுழி போட்ட பா.ஜ.கவின் செயற்பாடு குறித்து இதே ஆசிரியர் தலையங்கத்தில் முன்னர் சுட்டிக்காட்டியிருந்தோம். ராகுலின் எம்.பி. பதவியை நீக்க மேற்கொண்ட அரசியல் பின்புல செயற்பாடுக்கும், இங்கே இரசாயன உரத்தைத் தடை செய்ய கோட்டாபய எடுத்த தீர்மானத்துக்கும் குறைந்தபட்ச வித்தியாசங்கள் எவையும் இல்லை. ஆலோசகர்களின் கயிற்றை ஆனானப்பட்ட கோட்டாவே விழுங்கியபோது மோடி விழுங்கியதில் புதுமையில்லை. மோடியின் இந்துத்வா ஆட்சி ஹிந்துக்களுக்கு மகிழ்ச்சியே என்றாலும், இரண்டு தடவைகள் ஆட்சியில் இருக்கும்போது மக்களுக்கு இயற்கையாகவே அதிருப்தி இருக்கும். அதன் ஆரம்பமே இப்போது வெளிப்பட்டுள்ளது.

உண்மையில் இன, மதப்பற்று என்ற போர்வையில் தீவிர அரசியல் செய்யும் எவருக்கும் மக்கள் ஆதரவு தொடர்ந்து இருக்கப்போவதில்லை. அப்படி இருந்திருக்குமாயின் கோட்டா இங்கே இன்னும் ஆட்சியில் இருந்திருப்பார். ஆனால், அதிகாரத் திமிரால் செய்யப்பட்ட பாவங்கள் அவ்வப்போது நேரம் பார்த்து கர்மாவாக கருவறுத்துக் கொண்டிருப்பது காலத்தின் நியதி. முள்ளிவாய்க்காலுக்கும், குஜராத்துக்கும் ஒரே நியதிதான்.

கர்நாடகா என்பது இந்தியாவின் முக்கியமான மாநிலம். அங்கே காங்கிரஸுக்கு கிடைத்த அமோக வெற்றி ராகுலுக்கு ஏறுமுகத்தை இனி தரும். அதற்கு கால்கோளிட்டது பாரதீய ஜனதாதான்.



# வெற்றிக்கு வழி விடாமுயற்சியே..!

**முனைவர் என்.பத்ரி**

புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை என்பது சரிதான். ஆனால், தனது திறமையை சரியான முறையில் பயன்படுத்தும் ஒருவர் வெற்றியடைந்தே தீருவார் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

பல நேரம், தோற்றவர்களின் கதைகள் நம் கண்முன்னே வந்து, நம்மை அச்சுறுத்தக் கூடும். நமக்குத் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி, நம்மை கீழ் நோக்கி இழுக்கக்கூடும். ஆனால், தொடர்ந்து நாம் முயல்வதற்குத் தவறக்கூடாது. சாதனையாளர்களில் யாருமே தமது முதல் முயற்சியில் வென்றவர் இல்லை.

டொக்டர் அப்துல் கலாமின் ஆரியபட்டாவின் தோல்வி, தனது அடுத்த முயற்சியான அக்னி வெற்றி பெறவேண்டும் என்று உறுதியோடு அவரை உழைக்கத் தூண்டியது. எவரெஸ்ட் சிகரத்தை முதன்முதலில் தொட்ட எட்மண்ட் ஹிலாரியும் டென்சிங்கும் தமது தொடர் முயற்சியினாலும் பயிற்சியினாலும் மட்டுமே இச்சாதனையைத் தங்களுக்குரியதாக்கிக் கொண்டனர்.

போரில் தோற்றுப்போய் ஒளிந்து கிடந்த கஜினிக்கு வெற்றிக்கான வழியைச் சொல்லித் தந்தது ஒரு சிலந்திப் பூச்சி. எத்தனை முறை கீழே விழுந்தாலும் மீண்டும் மீண்டும் முயற்சி செய்து, தன் கூட்டைக் கட்டி முடித்த சிலந்தியின் செய்கை, மன்னனின் மனதில் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியது. அதனால், இழந்த நாட்டை மீண்டும் முயன்று மீட்டான்.

பீனிக்ஸ் பறவை எத்தனை முறை வீழ்ந்தாலும் தன் முயற்சியைக் கைவிடுவதில்லை. புதிய பறவையாக உயிர் பெற்று மீண்டு வரும்வரை முயன்றுகொண்டே இருக்கிறது. இறுதியில் வெற்றியையும் பெறுகிறது.

மின்சாரத்தைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் ஆயிரம் தோல்விகளைக் கண்டவர். அதற்காக அவர் தனது முயற்சியைக் கைவிட்டதே இல்லை. தொடர்ந்து ஆராய்ச்சி செய்ததன் விளைவாகவே ஆயிரத்திற்கு மேற்பட்ட கண்டுபிடிப்புகளுக்கு சொந்தக்காரர் ஆனார்.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் ஐந்து முறை தேர்தலில் தோற்றபோதும் இனி தேர்தலே வேண்டாம் என்று ஒதுங்கி விடவில்லை. இறுதியாக வெற்றி பெற்று உலகமே பாராட்டும் ஒப்பற்ற தலைவராகத் திகழ்ந்தார். நாள்தோறும் குறைந்தபட்சம் ஐந்து பக்கங்களாவது விடாமுயற்சியோடு எழுதிய பெர்னாட் ஷா உலகின் தலைசிறந்த எழுத்தாளரானார்.

சிங்கம் இரையைத் தேடும்போது அதன் கவனம் முழுவதும் குறிப்பிட்ட ஒரு விலங்கின் மீதே இருக்கும். அது கிடைக்கும்வரை தன் முயற்சியைக் கைவிடாது. இரை கிடைக்கும்வரை அதன் ஓட்டம் நிற்காது. வெற்றி கிட்டும்வரை நாமும் நிற்காமல் ஓட வேண்டும்.

''உலகிலேயே மிகப்பெரிய வெற்றி, உன்னை நீயே வெல்வதுதான்'' என்றார் மாவீரர் நெப்போலியன். நம் மனதை எங்கும் அலைய விடாமல் கட்டி வைத்துக் கொண்டால் வெற்றி நமக்கு சாத்தியமாகும்.

1870ஆம் ஆண்டில் நியூயோர்க் நகரத்தில் ஓர் இடத்தில் பாலம் கட்டுவது சாத்தியமே இல்லையென வல்லுநர்கள் கருதினார்கள். ஆனால், பொறியியலாளர்களான வொஷிங்டன் ரோப்ளிங்கும் அவரது தந்தை ஜோன் ரோப்ளிங்கும் அதனை சாத்தியப்படுத்தினார்கள். பாலம் கட்டும் பணியைத் தொடங்கிய சில மாதங்களிலேயே கட்டுமானப்பணி நடந்த இடத்திலேயே ஒரு விபத்தில் தந்தை ஜோன் ரோப்ளிங் இறந்து போனார்.

அந்தப் பணியைத் தொடர்ந்த மகன் வொஷிங்டன் ரோப்ளிங்கும் ஒரு விபத்தில் அடிபட்டு மூளை பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார். எல்லோரும் அந்த இடத்தில் பாலம் கட்டுவது முட்டாள்தனமானது என்று கேலி செய்தார்கள். சிகிச்சைக்குப் பின் வொஷிங்டன் ரோப்ளினுக்கு அசையும் ஒரு விரலும் அசையாத மனமும் மட்டுமே எஞ்சி இருந்தன.

சில நாட்களில் மனைவி எமிலியுடன் விரலாலேயே தன் கருத்துகளைத் தெரிவிக்கும் ஒரு முறையை உருவாக்கிக் கொண்டார். பாலம் கட்டும் பொறியியலாளர்களை வரவழைத்தார். மனைவி மூலம் அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு விளக்கினார். நியூயார்க் நகரத்தில் மான்ஹட்டன் பகுதியையும், லோங் ஐலண்ட் ப்ரூக்ளின் பகுதியையும் இணைக்க நதியின் குறுக்கே 5,989 அடி நீளமுள்ள தொங்குபாலம் ஒன்றைக் கட்டி சாதனை படைத்தார். அவரின் விடாமுயற்சியே இதை சாத்தியமாக்கியது.

விதி தன் முழு சக்தியையும் பிரயோகித்து நம்மை முடக்கி வைத்தாலும், நாம் நினைத்ததை நடத்தி முடிக்க வேண்டும். பயணிக்கும் பாதையை இருள் சூழ்ந்த போதிலும் நம் விடாமுயற்சியால் புதிய வழி ஒன்றை உருவாக்க வேண்டும். தொடங்கிய நல்ல செயல்களுக்குத் தடங்கல் வரும்போதெல்லாம் நாம் செயலற்று நின்றுவிடக் கூடாது. நம் கனவுகளுக்கு, நாம்தான் உயிர் கொடுக்க வேண்டும். நம்முடைய உரத்த சிந்தனையும் முயற்சியும் நமக்குத் தேவையான ஆற்றலைத் தரும்.

வெற்றிக்காக நாம் பல படிகளைக் கடக்கும்போது மூச்சு வாங்கும். அதற்காக பயணத்தைப் பாதியில் நிறுத்திவிடக் கூடாது. நமது தவறுதலான திட்டங்கள் நம்மைப் பலமுறை சறுக்கி விழச் செய்யலாம். ஏன் சறுக்கல் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து அக்குறையைக் களைந்தால், தொடரும் பயணம் சுகமாக இருக்கும்.

எதையும் தொடங்கும்போது இதனை நம்மால் செய்துவிட முடியுமா என்று மலைப்பாகத்தான் இருக்கும். நாலு பேர் நம்மை விமர்சிக்கலாம். தோற்றுப் போனால் கேலி செய்வார்களே என்ற அச்சம் எழலாம். இதற்கெல்லாம் அஞ்சி ஒதுங்கி நின்றால் ஒதுங்கி நின்று கொண்டே இருக்கவேண்டியதுதான். நாம் விடாமுயற்சியையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நமது இலட்சியப் பயணம் வெற்றியடையும்.

தொடர்ந்து முயற்சி செய்தால் இறுதியில் வெற்றி உறுதி. முயற்சி செய்யச்செய்ய நமக்குள்ளேயே ஆர்வம் வந்துவிடும். அந்த ஆர்வம் நம்மை மேலும் உறுதியாக செயலில் ஈடுபட வைக்கும்.

*(நன்றி - தினமணி)*

## நக்கல் நமசிவாயம்

*அமைச்சுப்பதவிகள் கிடைக்காவிட்டால் எதிர்க்கட்சியில உட்கார பொதுஜன பெரமுன எம்.பிக்கள் சிலர் தீர்மானமாம்... மக்களுக்கு சேவையாற்ற எவ்வளவு துடிக்கிறாங்கள் பாருங்கோ..!*



## இன்றைய நாளில்...

- 1932 – இராணுவப் புரட்சி ஒன்றையடுத்து ஜப்பானியப் பிரதமர் இனுக்காய் சுயோசி கொல்லப்பட்டார்.
- 1957 – பசிபிக் பெருங்கடல் பகுதியில் மால்டன் தீவில், பிரித்தானியா தனது முதலாவது ஐதரசன் குண்டைப் பரிசோதித்தது. ஆனாலும், இது தோல்வியடைந்தது.
- 1958 – சோவியத்தின் ஸ்புட்னிக்-3 விண்கலம் ஏவப்பட்டது.
- 1960 – சோவியத்தின் ஸ்புட்னிக்-4 விண்கலம் ஏவப்பட்டது.
- 1963 – நாசாவின் மேர்க்குரி - அட்லஸ் 9 விண்கலம் ஏவப்பட்டது. கோர்டன் கூப்பர், இவ்விண்கலத்தில் பயணித்து விண்வெளியில் ஒரு நாளுக்கு மேல் தங்கிய முதலாவது அமெரிக்கர் ஆனார்.
- 1985 – நெடுந்தீவு மாவலித்துறையில் இருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட 'குமுதினி' என்ற படகு இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு அதில் பயணித்த குழந்தைகள், பெண்கள் உட்பட 36 பேர் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டனர்.
- 1996 – ஈழப்போர்: இலங்கைப் படைத்துறை யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குப் பகுதியை விடுதலைப்புலிகளிடம் இருந்து மீட்பதற்காக மூன்றாம் சூரியக்கதிர் நடவடிக்கையை ஆரம்பித்தது.
- 2005 – திருகோணமலை நகர் மத்தியில் இரவோடிரவாக புத்தர் சிலை எழுப்பப்பட்டதில் அங்கு கலவரம் வெடித்தது.
- 2006 – வவுனியாவில் நோர்வே அகதிகள் சபைப் பணியாளர் ஜெயரூபன் ஞானப்பிரகாசம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

# பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் பங்கேற்க இளைஞர்களுக்கு வாய்ப்பளித்த முதல் நாடு இலங்கையாகும்!

★ இளைஞர் கோரிய மாற்றத்தை நாம் ஏற்படுத்தியுள்ளோம் ★ இன்று கடமையை செய்தால் இன்னும் 25 வருடங்களில் பெருமிதம் கொள்ள முடியும்

## இளையவர்களிடம் ஜனாதிபதி ரணில் வேண்டுகோள்



இன்னும் 25 ஆண்டுகளில் நாடு வெற்றிப் பாதையை எட்டியிருக்கும் போது, "நாம் எடுத்த நடவடிக்கையே நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தது" என இளைஞர் சமூகம் பெருமிதம் கொள்ள முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஹெட்ஜில் சனிக்கிழமை (13) இடம்பெற்ற பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் இளம் உறுப்பினர்களை தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2048 அபிவிருத்தி அடைந்த இலங்கையை நோக்கிய பயணத்துக்கான வாய்ப்பு இளைஞர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அதற்கான ஆரம்ப முயற்சியாக உலகில் இதுவரையில் எந்தவொரு நாட்டிலும் இல்லாதவாறு பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வை குழுக்களில் பங்கேற்கும் வாய்ப்பை இளைஞர்களுக்கு பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த மாற்றத்தை இளைஞர்களே கோரினர். ஆகையால் இந்த சந்தர்ப்பத்தை கொண்டு உரிய வகையில் பயனடைவர் என தான் நம்புவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்றிட்டமான (UNDP) இன் உதவியுடன் இலங்கை பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த வேலைத்திட்டத்தில் பிரதமர் தினேஸ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரும் உரையாற்றினர்.

பாராளுமன்றத்தில் நிறுவப்பட்டுள்ள 17 துறைகளுக்கான துறைசார் மேற்பார்வை குழுக்களுக்காக பத்திரிகை விளம்பரம் ஒன்றின் ஊடாக அறிவிக்கப்பட்டு பாராளுமன்றச் செயலாளரினால் தெரிவு செய்யப்பட்ட 18 – 35 வயதுக்கிடையிலான 550 இளைஞர்களுக்கு செயலமர்வில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் இந்த துறைசார் மேற்பார்வைக்குழு செயற்படுவதோடு, திருத்தம் செய்யப்பட்ட நிலையியற் கட்டளை ஏற்பாடுகளுக்கு இணங்க முன்னெடுக்கப்படும் விசாரணை செயற்பாடுகளின் போது செயற்குழுத் தலைவர்களின் உதவிக்காக இளம் உறுப்பினர்கள் ஐவரை தெரிவுசெய்து அழைப்பு விடுக்க முடியும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு செயற்குழுவுக்குமான இளம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "இன்று இந்த சபையில் 500 புதிய இளம் உறுப்பினர்கள் இணைந்துகொண்டுள்ளனர். மேற்பார்வையாளர்களாக அன்றி பாராளுமன்ற குழுக்களில் உள்ள இளம் பிரதிநிதிகளாகவே இவர்கள் பங்கெடுத்துள்ளனர். உலகில் முதல் முறையாக இவ்வாறானதொரு செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

பாராளுமன்றக் குழுவிலும் அமெரிக்க செனட் குழுவிலும் காங்கிரஸ் குழுவிலும் அவர்களது சபை உறுப்பினர்கள் மாத்திரமே பங்கேற்க முடியும். ஆனால் நமது பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நிலையியற் கட்டளைகளில் மேற்கொண்ட திருத்தங்கள் காரணமாக இளம் உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

குழு உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மேலதிகமாக உங்களது கருத்துகளும் உள்வாங்கப்படும். சபை அமர்வுகளும் விவாதங்களும் மட்டுமே பாராளுமன்றத்தின் பணிகளென பலரும் நினைக்கிறார்கள். இன்று அநேகமான பாராளுமன்றங்கள் குழுநிலைச் செயற்பாடுகள் மூலமே அதிகளவான பணிகளை மேற்கொள்கின்றன.

நிதி வழங்கலை அனுமதித்தல் நிதியை ஈடுபடுத்தல், செலவிடுதல், சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் கூட்டுத் தாபனங்களை கண்காணித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்பார்வைக் குழுக்களின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதனால் சபை அமர்வில் பங்கேற்றல் மற்றும் உரையாற்றுதல் ஆகியவற்றை தவிர்ந்த ஏனைய அனைத்து பணிகளிலும் நீங்கள் பங்கெடுக்க முடியும்.

இந்த திட்டம் பற்றி கூறிய போது இது சாத்தியப்படாத விடயம் என சிலர் கூறினர். சிலர் இதனால் பயனில்லை நேரம் மட்டுமே வீணாகும் என்றனர். சிலருக்கு திட்டம் எவ்வாறானது என்பதே பெரும் குழப்பமாகியிருந்தது. இருப்பினும் சிலர் அச்சமின்றி தங்களது பெயர்களை அனுப்பி வைத்தனர். அவர்களிலிருந்தே சிறந்த 535 பேரை நாம் தெரிவு செய்துள்ளோம். நீங்கள் சாத்தியமாக்கிக் காட்டுங்கள். நீங்கள் சாத்தியமாக்கிக் காட்டிய பின்னர் மற்றையவர்களும் இந்த பணியில் பங்கெடுப்பர். அதன் பின்னர் ஆயிரக் கணக்கானவர்கள் வரத் தொடங்கிவிட்டால் எவ்வாறு நிர்வகிப்பது என்பதை பற்றியே இப்போது நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

உங்களுக்கு இன்று வாய்ப்புக் கிடைத்துள்ளது. சிறிதளவான இளைஞர்களுக்கு மட்டுமே உலகில் இவ்வகையான வாய்ப்புகள் கிட்டியிருந்தன. அந்த வகையில் 28 வயதில் பாராளுமன்றத்துக்கு தெரிவாகி பிரதி அமைச்சராக பொறுப்பேற்ற நான் அதிஷ்டசாலியாவேன். அதற்கு முன்னதாக அப்போதைய பிரதமர் ஜே.ஆர்.ஜயவர்தனவுடன் பாராளுமன்றத்துக்கு செல்லக் கிடைத்ததால் பாராளுமன்ற கடமைகள் பற்றி அறிந்துகொண்டேன். பலருக்கும் அவ்வாறான வாய்ப்புக்கள் கிட்டியதில்லை. இன்று உங்களுக்கு அந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதனை கொண்டு முழுமையாக பயனடையுங்கள்.

கடந்த வருடத்தில் இந்நாட்டில் பெரும் மோதல்கள் ஏற்பட்டிருந்தன. அந்த நேரத்தில் மேற்படி விடயம் தொடர்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் கலந்துரையாடினேன். இந்த பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வுகளை வழங்கலாம் என ஆலோசித்தோம். அதற்கு முன்னதாக வைக்கப்பட்ட எந்த கோரிக்கைகளுக்கும் தீர்வு கிடைக்காததால் 225 பேரையும் தியவன்னா ஓயாவில் தள்ளிவிடுவோம் என்று கூறினார்கள். அப்படிச் செய்திருந்தால் சுற்றாடல் பாதிப்பு மட்டுமே ஏற்பட்டிருக்கும்.

அதன் பின்னர் அவர்களின் வெற்றிடத்துக்கு புதியவர்கள் 225 பேரை கட்சிகளின் செயலாளர்கள் நியமித்திருப்பர். உண்மையில் பிரச்சினைகளுக்கு அது தீர்வாகாது. வீடுகளுக்கு தீ வைப்பதும் வீதிகளில் இறங்கி வீடுகளுக்கு தீ வைப்பதும் பாராளுமன்றத்தை சுற்றி வளைப்பதும் தீர்வாக அமையாது.

நாம் ஏன் வங்குரோத்து நிலைக்குச் சென்றோம். எமது பொருளாதாரத்துக்கு என்ன நடந்தது என்ற பிரச்சினைகள் தலையெடுத்திருந்தன. எனது சிறு வயது காலத்தில் இலங்கையானது ஜப்பானுக்கு அடுத்தபடியான நாடாக விளங்கியது. இன்று நாம் எங்கு இருக்கிறோம்.

அதன்படி இப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களிடத்தில் கேட்டபோது, அதற்கான தீர்வாக இளையவர்களை பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களில் உள்வாங்கலாம் என்ற யோசனையை அவர் முன்வைத்தார். அதனை சபாநாயகரும் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர். எனவே அவருக்கு நன்றி கூற வேண்டும்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பம் எவருக்கும் கிடைக்கும் என நான் நம்பவில்லை. பொருளாதார வீழ்ச்சியால் நாடு முடங்கிக்கிடக்கும் வேளையில் முழுமையான மறுசீரமைப்புச் செயற்பாடொன்றை நாம் முன்னெடுக்க முயற்சிக்கிறோம். அதற்காக செலவீனங்களை மட்டுப்படுத்தினோம். புதிய செயற்றிட்டங்கள் கொண்டுவரவேண்டும், இப்போது விலைச் சூத்திரங்கள் ஊடாக எண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது, புதிய கல்வித் திட்டம் ஒன்று பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

இப்போது அரசாங்கம் காலநிலை அனர்த்தங்கள் தொடர்பான 5 புதிய சட்டங்களையும் பெண்களின் உரிமை பாதுகாப்பு தொடர்பான 3 அல்லது 4 சட்டங்களையும் கொண்டுவரவுள்ளதோடு வேறு பல புதிய சட்டங்களும் கொண்டுவரப்படவுள்ளன. அவை தொடர்பில் கலந்தாலோசித்து உங்களுடைய கருத்துகளையும் வழங்குங்கள். எவ்வாறு நிதி செலவிடப்படுகிறது? குறித்த சில துறைளுக்கு வழங்கக் காரணம் என்ன? சில விடயங்களுக்கு வழங்கப்படாததன் காரணம் என்ன? இவை அனைத்தையும் அறிந்துகொள்ள முடியும். அதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும். உங்களுக்கு உதவ பாராளுமன்றத்தில் ஆய்வுக் குழுவொன்று உள்ளது. பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகம் ஒன்றும் புதிதாக நிறுவப்படவுள்ளது. ஏனைய அமைச்சுக்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஜே.ஆர்.ஜயவர்தன கேந்திர நிலையமும் அரசியல் கல்விக்கான கேந்திர நிலையமாக மாற்றப்படவுள்ளது. இவை அனைத்தையும் கொண்டு முழுமையாக பயனடையும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது.

பாராளுமன்ற அங்கத்தவர்களாகிய நமக்கும் அதற்குரிய பணிகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்புள்ளது. பாராளுமன்றத்தில் எல்லா நேரங்களிலும் கருத்து மோதல்கள் ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கவில்லை. இந்த மேற்பார்வை குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் இவற்றில் கட்டாயம் பங்கேற்ற வேண்டும்.

அன்றாட விடயங்களை மாத்திரமின்றி முக்கியமான விடயங்கள் தொடர்பில் ஆராய வேண்டும். குழு அமர்வு இடம்பெறாவிட்டால் அது குறித்து தலைவர்களிடத்தில் கேட்டறிய வேண்டும். எம்.பிக்கள் பங்கெடுக்காவிடின் அவர்களிடத்திலும் காரணங்களை கேட்டறியுங்கள். 2 மாதங்களுக்கு மேலாக பங்கெடுக்காதவர்களை மாற்றுங்கள், இல்லாவிட்டால் இளையவர்களுக்கான வாய்ப்புக்களும் இல்லாமல் போய்விடும்.

முதற் தடவையாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை கொண்டு முழுமையாக பயனடைய வேண்டும்.

எமது பாராளுமன்றம் பழமையானது. 1835 ஆம் ஆண்டு முதலான பாரம்பரியத்தை கொண்டது. எம்மை விட பழமையான பாராளுமன்றங்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, டென்மார்க், சுவிஸ்லாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே உள்ளன.

இந்த பாராளுமன்றத்தில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இது தொடர்பில் நாம் பொதுநலவாய குழுவினருக்கும் அறிவித்து அவர்களுக்கும் அழைப்பு விடுக்க முடியும்.சர்வதேச பாராளுமன்ற சங்கத்தினருக்கு அறிவித்து அவர்களுக்கும் அழைப்பு விடுக்க முடியும். ஐரோப்பிய பாராளுமன்றம் இதுபற்றிய விஷேட அவதானத்தை செலுத்தும். இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அமெரிக்காவின் உதவியையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். அந்த பொறுப்புகள் உங்களையே சார்ந்துள்ளது. பாராளுமன்றத்தின் இளம் பிரதிநிதிகளும் எம்.பிக்களும் இணைந்து இந்த பணிகளை செய்யுங்கள்.

நாம் அபிவிருத்து அடைந்துவரும் நாடாகவே இருக்க முடியாது. எவ்வாறு நாம் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறுவது என்பதை சிந்திக்க வேண்டும். எமக்கு நல்லதொரு எதிர்காலம் தேவைப்படுகிறது. அதற்காக நல்லதொரு பொருளாதாரமும் அவசியமாகும். சட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அது பற்றிய உங்களது கருத்துகளைக் கூறுங்கள்.

கரு ஜயசூரியவினால் மக்கள் சபை சட்டம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது. அதன்கீழ் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் மக்கள் சபையொன்று உருவாக்கப்படும். அதனிலும் பங்கெடுக்க இளையோருக்கு வாய்ப்பளிக்கப்படும். பாராளுமன்றத்துக்கு தெரிவாகும் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதற்காக கிராம மட்டத்திலுள்ள அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் தேசிய இளைஞர் மன்றத்தினால் முன்னெடுக்கப்படுகிறது.

அந்த மாற்றங்களை காண இன்னும் பல நவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அரசியலமைப்புக்கு அமையவே செயற்றிட்டங்களை மாற்ற வேண்டும். அடுத்த பாராளுமன்றம் வரும் வரையில் பார்த்துக்கொண்டிருக்காமல் உங்கள் அனைவருக்கும் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த சவாலை நாம் ஏற்றுக்கொண்டு நல்ல தீர்வுகளை பெற்றுக்கொடுப்போம்.25 வருடங்களின் பின்னர் "நாம் மேற்கொண்ட தீர்மானங்களே இலங்கையின் அபிவிருத்திக்கு வழிவகுத்தன" என்று நீங்கள் பெருமிதம் கொள்ள முடியும்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

"எமது நாட்டின் அரசியல் களத்தில் சொல்வது ஒன்று செய்வது ஒன்றுமாகவே காணப்படுகின்றது. அதற்கு மாறாக சொல்வதை செய்யும் கலாசாரம் உருவாகினால் இன்றைய தினம் மிகப்பெரிய திருப்புமுனையாக அமையும்.

எதிர்க்கட்சி என்ற வகையில் நல்ல விடயங்களை வரவேற்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவரும் நாட்டுக்கு நல்ல விடயமொன்று கிட்டுமாயின் அதனை வரவேற்பது அவசியம்.

அதனால் ஜனாதிபதி உள்ளிட்டவர்களின் இந்த பணி பாராட்டுக்குரியது. நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கம், நீதித்துறை ஆகியவற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகாரப் பரவலாக்கம் அவசியமாகிறது. அந்த வகையில் 17 துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு 530 இளைஞர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியது" என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



**உடப்பு தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பரிந்துரைக்கமைய வித்தியாலய பழைய மாணவர்களான வஸ்தியாம்பிள்ளை கணேசமூர்த்தி (லண்டன்) )மற்றும் ஆர்.நல்லைக்கந்தன் (லண்டன்) ஆகியோரால் பெறுமதியான தளபாடங்கள் (11) பாடசாலைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன. இதன்போது அதிபர் பூ.சுகந்தன்,உதவி அதிபர் சோ.அருட்குமரன் ஆகியோர் கலந்து கொண்டு தளபாடங்களைப் பெற்றுக் கொண்டனர். (உடப்பு செய்தியாளர்)**



**நாட்டில் தற்போது நிலவும் தென்மேல் பருவக்காற்று காரணமாக உடப்பில் உள்ள கடற்கரை பகுதிகளில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது.இதனால் கடற்றொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். (உடப்பு செய்தியாளர்)**



**தென்மராட்சி-மந்துவில் சின்னச்சந்தைப் பகுதியில் 150வருடங்கள் பழமை வாய்ந்த புளியமரம் அடியோடு முறிந்து விழுந்துள்ளது.**

**கடந்த சில தினங்களாக நிலவிய மழையுடன் கூடிய கடும்காற்று காரணமாகவே குறித்த புளியமரம் முறிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

**(சாவகச்சேரி நிருபர்)**

### தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

**வெள்ளிக்கிழமை 2023.05.12**

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5112 | ரூ. 10,000,000.00 | V | 1 3 9 5 3 4 |
| கொவிசெத | 3354 | ரூ. 102,638,670.24 | T | 29 40 47 76 |
| ஜாதிக சம்பத | 1567 | ரூ. 10,887,040.40 | | 8 6 6 0 0 5 |
| தன நிதானய | 1142 | ரூ. 89,668,349.60 | H | 19 23 42 61 |
| ஹந்தஹன | 421 | ரூ. 2,656,565.20 | | 16 23 25 37 |
| மெகா பவர் | 1460 | ரூ. 320,725,586.00 | C | 11 / 05 52 67 80 |

**சனிக்கிழமை 2023.05.13**

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5113 | ரூ. 12,039,049.00 | N | 9 3 4 1 9 8 |
| கொவிசெத | 3355 | ரூ. 103,028,917.44 | K | 12 41 57 64 |
| ஜாதிக சம்பத | 1568 | ரூ. 10,887,040.40 | | 8 9 6 9 8 5 |
| தன நிதானய | 1143 | ரூ. 89,870,963.20 | Q | 08 11 23 71 |
| ஹந்தஹன | 422 | ரூ. 2,684,478.00 | | 10 15 31 53 |
| மெகா பவர் | 1461 | ரூ. 320,785,262.00 | K | 18 / 19 33 68 76 |

# தனியார் கல்வி நிலைய பரீட்சை வினாத்தாள் வலயப் பாடசாலையில்!

## வடக்கு கல்வியில் இடம்பெறும் முறைகேடு

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆங்கில மொழி விஞ்ஞான பாடப் பரீட்சைக்கு வழங்கப்பட்ட வினாத்தாள் ஏற்கனவே தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இடம்பெற்ற பரீட்சை வினாத்தாள் என்பது அம்பலமாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழி விஞ்ஞான பாட பரீட்சை இடம்பெற்றுள்ளது.

ஆனால் குறித்த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாள் ஏற்கனவே தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாள் என்பது அம்பலமாகியது.




யாழில் தனியார் கல்வி நிறுவனங்கள் பெருகிக் கொண்டு செல்லும் நிலையில் மாணவர்களை ஈர்ப்பதற்காக தமது கல்வி நிறுவனங்களில் பயன்படுத்திய வினாத்தாள்களை யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு விநியோகித்தார்களா என்ற சந்தேகம் வலுக்கிறது.

தனியார் கல்வி நிறுவனங்களையும் ஆசிரியர்களையும் ஈர்ப்பதற்காக பரீட்சை வினாத்தாள்களை வலயக் கல்வி அலுவலகத்திற்குள் நுழைய யார் அனுமதித்தது இதன் பின்னணி என்ன என்பது தொடர்பில் கல்வி உயர் அதிகாரிகள் ஆராய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாட்டை உடைத்து பாடசாலைக் கல்வியை அழித்து தனியார் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியை தூண்டுவதற்கு யாரோ ஒரு கூட்டம் திட்டமிட்டு செய்த இந்த நடவடிக்கையை பரீட்சை முறைகேடுகள் என்ற அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும்.



யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இரண்டாம் நாள் நினைவேந்தல் சனிக்கிழமை மதியம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுத்தூபியில், பல்கலைக்கழக மாணவர்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

## கிளிநொச்சியில் இடம்பெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வு



**(மூ .தமிழ்ச்செல்வன்)**

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை தாதியர்கள் ஏற்பாடு செய்த தாதியர் தின நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது .

மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றி யுத்த நிலைமையின்போது உயிரிழந்த தாதியரின் உருவப்படத்துக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தாதியர்கள் சத்தியப்பிரமாணம் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற தாதிய கல்லூரியின் பணிப்பாளர் ராயூலாதேவி வல்லிபுரநாதன், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ். சுகந்தன், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## கெற்பேலி பகுதியில் ஆலயம் உடைத்து பெறுமதியான பொருட்கள் திருட்டு



**(சாவகச்சேரி நிருபர்)**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமராவை அடித்து உடைத்த கொள்ளையர்கள், ஆலய விக்கிரகங்களின் கீழ் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான உலோகங்கள் மற்றும் உண்டியல் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றிருப்பதுடன் பாதுகாப்புக் கமராவின் வன் வட்டினையும்(hard disk)எடுத்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## முள்ளிவாய்க்கால் நினைவை முன்னிட்டு இரத்ததான முகாம்



மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்னால் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்முகாமில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் இணைந்து இரத்ததானம் வழங்கினர்.

## மன்னாரை வந்தடைந்தது தமிழ் இனப்படுகொலை ஊர்திப் பவனி



**(மன்னார் நகர் நிருபர்)**

தமிழினப் படுகொலை வாரத்தை முன்னிட்டு இனப்படுகொலைக்கு நீதி கோரியும் அதே நேரம் முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்தும் தமிழர் தாயகப்பகுதிகளில் தமிழ் இனப்படுகொலை ஊர்திப்பவனி தமிழ் உணர்வாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் பேரவலம் இடம் பெற்று கொத்துக்கொத்தாக தமிழ் மக்கள் கொன்று புதைக்கப்பட்ட முள்ளிவாய்கால் நினைவு முற்றத்தில் இருந்து ஆரம்பமான பவனி இரண்டாம் நாளான சனிக்கிழமை(13) வவுனியாவை வந்தடைந்தது.

இதன்போது வவுனியாவில் பொதுமக்கள் அஞ்சலி செலுத்திய பின்னர் மாலை 4 மணியளவில் மன்னார் பிரதான சுற்றுவட்ட பகுதி மற்றும் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக மக்களின் அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டது.

அங்கு நூற்றுக்கணக்கான மக்கள் இணைந்து அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து பேசாலை நோக்கி ஊர்தி புறப்பட்டுச் சென்று மாலை ஐந்து மணியளவில் பேசாலை பகுதி மக்கள் அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

## தமிழரசுக் கட்சியின் தொகுதி கிளையில் மோதல் சம்பவம்

### ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

**(யாழ்.நிருபர்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக் கூட்டத்துக்கு பின்னர் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குறித்த கூட்டத்துக்கு பின்னர் இரண்டு நபர்களிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கமே மோதலுக்கு காரணம் எனத் தெரியவருகிறது.

தாக்குதலில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## பலாங்கொடையில் காணாமல்போனவர் வீடொன்றில் திருடச் சென்றபோது கைது

### வேவல்வத்தை மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

பலாங்கொடை, சமனலவத்த பிரதேசத்தில் காணாமல்போன மூவருள் ஒருவர் இரத்தினபுரி,வேவல்வத்த பிரதேச வீடொன்றில் சோற்றுப் பானை மற்றும் இதர பொருட்களை திருடும்போது கையும் மெய்யுமாக பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி, வேவல்வத்த, தியவெல்ல பகுதியில் இந்நபர் வீடொன்றினுள் புகுந்து அங்கு சமையலறையில் இருந்த சோற்றுப் பானை உட்பட மேலும் பல பொருட்களை திருடி தப்பிக்க முயலும் போது வீட்டார் மற்றும் பிரதேச மக்களினால் அவர் மடக்கிப்பிடிக்கப்பட்டு வேவல்வத்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து பலாங்கொடை பொலிஸார் வேவல்வத்தை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு அவர்களிடம் சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் பலாங்கொடை, சமனலவத்தை பிரதேசத்தில் கடந்த 08 ஆம் திகதி முதல் காணாமல் போன நபர் என பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பாக பேசப்பட்டது. இதேவேளை, பலாங்கொடை பிரதேசத்தில் கடந்த 03 ஆம் திகதி ஆர். எம். நிஹால் என்ற பெயருடைய ஒருவரும் காணாமல் போயுள்ளார்.இந்நபர் காணாமல் போவதற்கு முன் அவரது கைத்தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்ததாகவும் அதன் பின்னர் அவர் வெளியேறிய பின் காணாமல் போனதாகவும் அவரது குடும்பத்தினர் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் காணாமல் போன நபருக்கு இறுதியாக தொலைபேசி அழைப்பு விடுத்தது தான் எனவும் தன்னைப் பொலிஸார் கைது செய்வார்கள் என்ற அச்சத்தில் இவ்வாறு மறைந்து வாழ்வதாகவும் தாங்கமுடியாத பசி காரணமாக திருட வந்ததாகவும் சந்தேகநபர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, இப்பிரதேசத்தில் காணாமல் போனோரின் பின்னணியில் இவருக்கு தொடர்புகள் இருப்பதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதனால் இவரைத் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்காக நீதிமன்றத்தின் அனுமதி பெறப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சர்வமத செயற்குழுவின் கலந்துரையாடல் ஹட்டனில்




**(கினிகத்தேனை நிருபர்)**

சகவாழ்வு, இனநல்லிணக்கம், பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றை சமூக மட்டத்தில் கட்டியெழுப்பும் நோக்கில் நுவரெலியா மாவட்ட சர்வமத செயற்குழுவின் கலந்துரையாடல் ஹட்டன் அஜந்தா விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன் ஆரம்ப உரையின் போது சமூகமட்டத்தில் இன ரீதியாக ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு முரண்பாடான விடயங்கள் இன ரீதியாக எவ்வாறு பிளவுபடுத்தப்பட்டு அதனூடாக ஏற்படுத்திய சமூக மட்டத்திலான பாதிப்புகள் குறித்து பேசப்பட்டது.

அதனைத் தவிரவும் ஒவ்வொரு பிரதேசங்களிலும் சர்வமதக் குழு உறுப்பினர்கள் ஊடாக கடந்த காலங்களில் இன ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய விடயங்களின் செயற்பாடுகளும் அது தற்போது சமூக மட்டத்தில் எவ்வகையில் முன்னெடுத்து செயற்படுகின்றது போன்ற விடயங்களும் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் ஒவ்வொரு பிரதேசங்களிலும் பிளவுகளை ஏற்படுத்தக் கூடிய பிரிவினை செயற்பாடுகள் பலவழிகளிலும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. அந்தவகையில் அந்த பிரதேசங்களில் மக்களுக்கு தெளிவை ஏற்படுத்தி இன ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான சர்வமதக் குழு எவ்வகையில் செயற்பட்டுள்ளது மற்றும் செயற்பட வேண்டும் என்ற கருத்துகளும் முன்வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இக்கலந்துரையாடலில் 2023 ஆம் ஆண்டுக்கு பின்னர் தொடர்ந்து சகவாழ்வு, நல்லிணக்கத்தை மாவட்ட மட்டத்தில் எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என்பதை அடிப்படையாகக் கொண்டே மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது. அதனடிப்படையில் குழுசெயற்பாடுகளுக்கூடாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள் ஒவ்வொரு குழுவினரால் முன்வைக்கப்பட்டது. அதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும் கலந்துகொண்டவர்களால் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

## நக்கில்ஸ் மலைத்தொடரில் தொடர்ச்சியாக காடுகள் அழிப்பு

### நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்

**(கண்டி செய்தியாளர்)**



கண்டி- மாத்தளை மாவட்ட எல்லைகளில் அமைந்துள்ள, உலக மரபுரிமைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நக்கில்ஸ் மலைத்தொடரில் உள்ள காடுகள் தொடர்ச்சியாக ஆங்காங்கே அழிக்கப்பட்டு வருவதாக சுற்றாடல் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

எல்கடுவ பிளாண்டேஷன் மற்றும் அரச பெருந்தோட்ட யாக்கம் உள்ளிட்ட மற்றும் சில தனியார் துறையினருக்கும் சொந்தமான சில காணிகளிலே இவ்வாறு மரங்கள் வெட்டப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு வனப் பாதுகாப்புப் பிரதேச மரங்கள் வெட்டப்படுவதால் நீரேந்து பிரதேசங்களில் நீர்ப்பற்றாக் குறை ஏற்படுவதுடன் இன்னும் சில சுற்றாடல் பிரச்சினைகள், மண்ணரிப்பு பிரச்சினைகள் என்பன ஏற்படுவதாக சுற்றாடல் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

எனவே, இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு சுற்றாடல் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.



**உக்குவளை பிராந்திய கல்வி அபிவிருத்திச் சங்கம் நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையில் இடம்பெற்றது. இதன்போது முன்னாள் காதிநீதவான் எம். நஜிப்தீன், உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலைக்கு புத்தகப் பொதியொன்றை அதிபர் எம். சறூக்கிடம் கையளித்தார்.**

**(படப்பிடிப்பு: உக்குவளை செய்தியாளர்)**

## ஹாலிஎல பகுதியில் வேன் விபத்து 8 யுவதிகள் உட்பட 11 பேர் காயம்



பதுளை, ஹாலி எல பகுதியில் வேனொன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 8 யுவதிகள் உட்பட 11 பேர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பதுளையில் இருந்து நேற்று முன்தினம் இரவு விகாரையொன்றுக்கு நடனக் குழுவை ஏற்றிச் சென்ற வேன், நேற்று அதிகாலை மீண்டும் பதுளை பகுதிக்கு திரும்பும் வேளை, பதுளை – பண்டாரவளை வீதியில் ஹாலி எல பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பாரிய மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது காயமடைந்த 8 யுவதிகள், 3 இளைஞர்களுமாக 11 பேர் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இவர்கள் 20 வயதுக்கு குறைந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் 7 பேர் மிகவும் ஆபத்தான நிலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலி எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்ல பல்கலைக்கழகக் கட்டமைப்பு தயார் செய்யப்படும்

## கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு









செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்ப வளர்ச்சியுடன் உலகம் முழுவதுமே அறிவுப் புரட்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் கொழும்பு பல்கலைக்கழகம் 10 ஆண்டு கால அபிவிருத்தித் திட்டத்தை முன்வைத்தால் அதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பழைய மாணவர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் 40 ஆண்டு நிறைவை முன்னிட்டு சிகரம் விருது வழங்கும் விழாவும் இதன்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாட்டுக்கும் சமூகத்துக்கும் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கும் தனித்துவமான பணியை ஆற்றும் பழைய மாணவர்களை பாராட்டும் வகையில் வழங்கப்படும் முதலாவது விருது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

மல்வத்து தரப்பு அனுநாயக்க வண.திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், பேராசிரியர் ஜே.பி. திசாநாயக்க,திலக் கருணாரத்ன உள்ளிட்ட 11 பேர் இங்கு விருதுகளைப் பெற்றனர்.

முழுமையான பல்கலைக்கழக கட்டமைப்பிலும் நவீனமயப்படுத்தலின் தேவை இருப்பதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு வழங்கக் கூடிய உடனடித் தீர்வுகளை கண்டறியுமாறும் கொழும்பு பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

இந்த 10 வருட கால அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் தயாரிப்பதற்கு தங்களை அர்ப்பணிக்குமாறு பழைய மாணவர்களிடம் மேலும் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு செய்யாவிட்டால் கொழும்பு பல்கலைக்கழகம் அந்த விசேட செயற்பாட்டுக்கு பங்களிக்கும் வாய்ப்பை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்தார்.

பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க மற்றும் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எச்.டி. கருணாரத்ன,பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் ஜே.எம்.எஸ். பண்டார உள்ளிட்ட உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# இந்திய இழுவை வலைப் படகுகள் ஏற்படுத்தும் அழிவுகளுக்கு நட்டஈடு எவ்விதத்திலும் ஈடாகாது

## தடுத்து நிறுத்துமாறு அமைச்சர் டக்ளஸுக்கு சிலாபத்தில் அழுத்தம்





இலங்கையின் கடல் வளங்களை அழிக்கும் வகையில் இந்தியக் கடற்றொழிலாளர்கள் எமது நாட்டு கடலில் மேற்கொண்டு வருகின்ற சட்டவிரோதமான இழுவைமடி வலைத் தொழிலை முற்றாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், இழப்பீடுகள் எவையும் இந்தியப் படகுகளினால் ஏற்படுத்தப்படுகின்ற அழிவுகளுக்கு ஈடாக அமையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை (13) சிலாபத்துக்கு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் குறித்த பிரதேச கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிடப்பட்ட விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறி எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில்முறை காரணமாக சிலாபம், புத்தளம் பிரதேச கடற்றொழிலாளர்கள் மாத்திரமன்றி வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களும் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருவதாகவும் அதனைத் தடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி வழங்குவது தொடர்பாக சிலாபம் கடற்றொழிலாளர்களினால் வெளிப்படுத்தப்பட்ட சந்தேகத்தை, முற்றாக மறுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.குறித்த விஜயத்தின் போது கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சிலாபம் பகுதியில் வாழ்ந்து வருகின்ற சுமார் 15,000 கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், சிலாபம் மீன் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள சந்தை கட்டடத்தில் வியாபார நடவடிக்கையை முன்னெடுத்தல், சிலாபம் துறைமுகத்தில் பொருத்தப்பட்டிருந்த வானொலி தொடர்பாடல் கருவியை பழுதுபார்த்து செயற்படுத்தல், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நட்ட ஈட்டை சிலாபம் கடற்றொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்தல், ஒயிலை குறைந்த விலையில் பெற்றுக் கொடுத்து கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் செலவை கட்டுப்படுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

# உருத்திரபுரீஸ்வரர் காணியை இவ்வாரம் அளவீடு செய்ய தொல்லியல் திணைக்களம் முயற்சி

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



இன நல்லிணக்கத்தை பாதிக்கும் செயற்பாடுகளை நிறுத்துங்கள் என்ற ஜனாதிபதியின் சொல்லை மீறி 18 ஆம் திகதி உருத்திரபுரீஸ்வரர் காணியை அளவீடு செய்ய தொல்லியல் திணைக்களம் முயற்சி எடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,பாராளுமன்றத்தில் கடந்த 9ஆம் திகதி என்னால் ஒரு முக்கியமான விடயம் சமர்ப்பிக்கப்பட்டது. அதாவது வடக்கு, கிழக்கில் தமிழர்களது பூர்வீக நிலங்களில் இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டும் சிலைகள் அகற்றப்பட்டும் சில கத்தோலிக்க தேவாலயங்கள் அழிக்கப்பட்டு அந்த இடங்களிலே பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் நிறுவப்படுகின்ற மிக முக்கிய விடயத்தை முன்வைத்தேன்.

அன்றைய தினம் கச்சதீவு உட்பட 66 விடயங்களை ஆவண ரீதியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியிருந்தேன். இந்த விடயம் தமிழர் பிரதேசங்களில் தமிழர்களை பாதிக்கின்றது எனவும் இது மோசமான விடயம் எனவும் அன்றைய தினம் உரையாற்றியிருந்தேன்.

இந்த விடயம் தொடர்பில் பாரதப் பிரதமர் மோடிக்கும் ஆவணத்துடனாக கடிதத்தை அனுப்பியும் உள்ளேன். அதேவேளை அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்களுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பல தரப்புக்கும் இந்த ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான பேச்சுவார்த்தையின் போதும் ஜனாதிபதியிடம் கையளித்து விடயத்தை உறுதிப்படுத்தியிருக்கின்றோம்.

நீங்கள் ஏன் இவ்வாறான விடயங்களை கையாளுகின்றீர்கள் எனவும் அரசாங்கம் காசு அனுப்பாமல் எவ்வாறு பிக்குமாரின் காசுகளில் இந்த விடயத்தை கையாள முடியும் உள்ளிட்ட வினாக்களை எமக்கு முன்னால் தொல்பொருள் திணைக்களத்திடம் ஜனாதிபதி வினவினார்.

இது நாட்டின் நல்லிணக்கத்துக்கும், இன ஒற்றுமைக்கும் ஆபத்தானது எனவும் அதனை உடனடியாக நிறுத்துங்கள் எனவும் 85ஆம் ஆண்டுக்கு முன்னரான வரைபடத்தை வைத்துத்தான் முடிவுகள் எட்ட முடியும் என நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டளையை வழங்கியிருந்தார்.

அவரது உத்தரவு சொல்லின் ஒலி மறைவதற்குள் எதிர்வரும் 18ஆம் திகதி கிளிநொச்சி, உருத்திரபுரத்தில் இருக்கின்ற உருத்திரபுரீஸ்வரர் காணியை பௌத்த விகாரை அமைப்பதற்காக அளவீடு செய்வதற்கு தொல்பொருள் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அது தொடர்பாக கரைச்சி பிரதேச செயலாளரின் கடிதம் ஒன்று ஆலய நிர்வாகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆலய வளாகத்தை பார்வையிட்டு நில அளவையும் செய்ய வேண்டும் என்ற செய்தி அதில் சொல்லப்பட்டுள்ளது. இது தொடர்பாக மற்றுமொரு கடிதத்தை நேற்று ஜனாதிபதிக்கு உடன் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைத்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.











உலக அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் ஏற்பாடு செய்து நடத்திய மூத்த கலைஞர் அமரர் கே.சந்திரசேகரனின் நினைவேந்தல் நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அன்னாரது உருவப்படத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கன் மற்றும் கலைஞர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தமிழ் எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் ஒன்றாகக் கதைத்தால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு தீர்வு கிடைக்கும்!

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா







(மன்னார் நகர் நிருபர்)



தமிழ்க் கட்சிகள் ஒன்றாக ஜனாதிபதியை சந்திக்கும் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காகவும் கதையுங்கள்.எமது உறவுகள்,பிள்ளைகள் இருக்கிறார்களா,இல்லையா, என்ன நடந்தது என்று கேளுங்கள்.தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் ஜனாதிபதியுடன் கதைத்தால் மாத்திரமே தீர்வு ஒன்று கிடைக்கும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த (12) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார்,பள்ளிமுனை பெருக்க மரத்துக்கு முன்பாக இடம் பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் யுத்த காலத்தில் தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர், உறவினர்களால் இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.பள்ளிமுனை பங்குத் தந்தை,உதவி பங்குத்தந்தை, பொதுமக்கள், இளைஞர் யுவதிகள் உட்பட அதிகளவான மக்கள் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டு கஞ்சியை அருந்தினர்.

இதன்போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலாக நாங்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வருகின்றோம்.வருடாவருடம் இதனை செய்து வருகின்றோம் .இதனை உப்பு இல்லா வெறும் கஞ்சி என்று ஒருவரும் நினைக்க வேண்டாம். எமது மக்கள் பட்ட துன்பம் துயரம் கலந்த உணவாக காணப்படுகின்றது.

இந்த கஞ்சியை பெற்றுக்கொள்ள மக்கள் எவ்வளவு தூரத்தில் அடிபட்டு நின்றதை நினைவு கூர வேண்டி உள்ளது.அதன் வலி எமது மக்களுக்கு இன்னும் தெரியவில்லை.வலி நிறைந்த கஞ்சி இது.

மேலும் ஜனாதிபதியை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துள்ளனர்.காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் குறித்து கதைக்குமாறு அவர்களிடம் நாங்கள் பல தடவைகள் கோரியிருந்தோம்.சுமார் 12 வருடங்களுக்கு மேலாக வீதியில் இறங்கிப் போராடி வருகிறோம். நாங்கள் வீதியில் நிற்கின்ற அம்மாக்கள் இல்லை.காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்காகவும் உறவுகளுக்காகவுமே போராடி வருகின்றோம்.இதனை ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.அம்மாக்கள் இன்று இரண்டாயிரம் நாட்களுக்கு மேல் வீதியில் நிற்கின்றனர்.அவர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்று ஜனாதிபதியுடன் கதையுங்கள்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் ஜனாதிபதியுடன் கதைத்தால் மாத்திரமே தீர்வு ஒன்று கிடைக்கும். எத்தனையோ தேவைகளுக்காக ஜனாதிபதியை சந்தித்து கதைக்கின்றீர்கள்.ஆனால் ஏன் வலிந்து காணாமல் போன எமது உறவுகளுக்காக கதைக்கின்றீர்கள் இல்லை ?ஜனாதிபதியுடன் பேசுமாறு நாங்கள் எத்தனையோ தடவைகள் உங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தோம்.தற்போதும் நாங்கள் உங்களிடம் கூட்டாக வேண்டிக் கொள்கிறோம்.தமிழ்க் கட்சிகள் ஒன்றாக ஜனாதிபதியை சந்திக்கும் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காகவும் கதையுங்கள்.

எமது உறவுகள்,பிள்ளைகள் இருக்கிறார்களா,இல்லையா, அவர்களுக்கு என்ன நடந்தது என்று கேளுங்கள், கதையுங்கள்.ஏற்கனவே எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் அதற்குத் தீர்வு இன்னும் கிடைக்கவில்லை.

அரசுக்கு தெரிந்து கொண்டே கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.இதனை எல்லாம் ஏன் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு செல்லும் தமிழ் கட்சிகள் கேட்கக்கூடாது?இவ்வாறான பிரச்சினைகள் குறித்து கதைக்குமாறே தமிழ் மக்களாகிய நாங்கள் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக பதினைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா!








**(மாளிகைக்காடு, அட்டாளைச்சேனை செய்தியாளர்கள், எஸ்.அஷ்ரப்கான்)**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதினைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபுவக்கர் தலைமையில் வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை(13) ஆரம்பமானது.

இந்நிகழ்வின் முதல் அமர்வின்போது களனிப் பல்கலைக்கழக ஆங்கில மொழி சிரேஷ்ட பேராசிரியரும் முதற்பெண்மணியுமான மைத்திரி விக்கிரமசிங்க பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு விசேட உரைநிகழ்த்தினார்.

அதேவேளை, மூன்றாவது அமர்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ் பிரதான உரையை நிகழ்த்தினார். 13ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களுக்கு ஐந்து அமர்வுகளாக இந்த பட்டமளிப்பு விழா ஏற்பாடாகியிருந்தது.

சனிக்கிழமை இடம்பெற்ற முதல் அமர்வில் கலை, கலாசார, தொழில்நுட்ப பீடங்களைச் சேர்ந்த 395 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 371 மாணவர்களும் மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 380 மாணவர்களும் பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

கலை கலாசார பீடத்தில் 2015/2016ஆம் கல்வி ஆண்டில் அரசியல் மற்றும் சமாதான கற்கையில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம்.எல்.ஏ.காதர் விருதை முகம்மட் அலி பாத்திமா அஸ்மியா பெற்றுக்கொண்டார். இதேவேளை, தமிழில் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் கைலாசபதி விருதை 2015/2016ஆம் கல்வி ஆண்டில் முகம்மட் ஹுசைன் பாத்திமா றிஸ்லா பெற்றுக்கொண்டதுடன் அதே கல்வியாண்டில் இந்து கலாசார கற்கைக்கான சிறந்த மாணவருக்கான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஞாபகார்த்த விருதை பேபி சாலினி ராமக்கவுண்டர் பெற்றுக்கொண்டார்.

இரண்டாவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த டிவயாளி கிடாரா மலீசா லக்சாணி வசந்த குமாரி 2015/2016 ஆம் கல்வி ஆண்டில் வர்த்தகத்துறையில் சிறந்த மாணவருக்கான ஏ.எம்.இஸ்மாயில் ஞாபகார்த்த விருதை பெற்றுக்கொண்டதுடன் முகம்மட் நஜீம் பாத்திமா நுஸ்ரா முகாமைத்துவ துறையில் ஏ.எல்.இப்ராலெப்பை ஞாபகார்த்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

மூன்றாவது அமர்வில், இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த அப்துல் மஜீத் முகம்மட் ஆகில் 2015/2016ஆம் கல்வி ஆண்டில் அரபு துறையில் சிறந்த மாணவருக்கான எம்.எச்.அப்துல் காதர் ஆலிம் ஞாபகார்த்த விருதையும் முகம்மட் இப்ராஹிம் பாத்திமா ஷீபா Islamic Thought & Civilization துறையில் கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி ஞாபகார்த்த விருதையும் கலந்தார் லெப்பை பாத்திமா மஸ்லிஹா Islamic Banking and Finance துறையில் சிறந்த மாணவருக்கான இஸ்மாயில் டீன் மரிக்கார் விருதும் வழங்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரண்டாம் நாள் அமர்வில் (நான்காவது அமர்வில்) பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் ஆகிய பீடங்களைச் சேர்ந்த 332 மாணவர்கள் பட்டங்கள் பெற்றதுடன் ஐந்தாவது அமர்வில் கலை கலாசார, முகாமைத்துவ வர்த்தகப் பீடங்களில் இணைந்து கல்வி கற்ற 374 வெளிவாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்பட்டன. அதேநேரம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம், தமிழ் உள்ளிட்ட துறைகளில் பட்டப்பின்படிப்புகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான முதுமாணி, முதுதத்துவமாணி பட்டங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் நிலவுகின்ற கொவிட்-19 அசாதாரண சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு, பட்டமளிப்பு விழா நிகழ்வு சுகாதார வழிகாட்டலுக்கமைய இடம்பெற்றன. பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் அமர்வில் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் த. ஜெயசிங்கம் விசேட உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த்துறைக்கான முதுகலை தத்துவமாணிப் பட்டம் பெற்ற ஜெஸ்மி மூஸா



**(எஸ்.அஷ்ரப்கான், மாளிகைக்காடு செய்தியாளர்)**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 15ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் ஊடகவியலாளரும் இலக்கிய விமர்சகரும் கல்வியியலாளருமான ஜெஸ்மி எம்.மூஸாவுக்கு தமிழ்த்துறைக்கான முதுகலை தத்துவமாணிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் வேந்தர் பாயிஸ் முஸ்தபா முன்னிலையில் நடைபெற்ற முதலாம் நாள் அமர்வின் ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை(13) இடம்பெற்றது.

களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில், மருதமுனை அல்-மனார் தேசிய பாடசாலையின் பழைய மாணவரும் அப்பாடசாலையின் ஆசிரியருமான ஜெஸ்மி மூஸா தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விசேட துறை கலைமாணி மற்றும் விசேட முதுகலைமாணி ஆகிய பட்டங்களை தமிழ்த்துறையில் பெற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழகம் சாராத நிலையில் தமிழ்த்துறைக்கான மூன்று துறைசார் பட்டங்களைப் பெற்ற ஊடகத்துறைசார்ந்த ஈழத்தின் முதல் ஆய்வாளராக இவர் இடம்பிடித்துள்ளார். சர்வதேச தமிழ் ஆய்வு மாநாடுகளில் பத்துக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள இவர், இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து வெளியாகும் பல்கலைக்கழக முதல்தர ஆய்விதழ்களில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன் இணைந்து ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை, இந்திய மற்றும் மலேசிய நாடுகளில் இலக்கியத்துக்கான இளம் ஆய்வாளர் விருதுகளைப் பெற்ற ஜெஸ்மி மூஸா, 2018ஆம் ஆண்டு கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் கலை, இலக்கிய, ஆய்வுத்துறைக்கான இளங்கலைஞர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ்பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றவர்களில் கலைத்துறையில் முதுகலை தத்துவமாணிப் பட்டம் பெற்ற ஒரே ஒரு ஆய்வு மாணவராகவும் இவர் இடம்பெறுகின்றார். தமிழ் கற்பித்தல் துறையில் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி வரும் இவர், தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் கலாநிதி ஆய்வு மாணவனாகவும் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச தாதியர் தின நிகழ்வில் கௌரவிப்பு





**(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் தாதியர்கள் சங்கம் ஏற்பாடு செய்த சர்வதேச தாதியர் தின நிகழ்வு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை(13) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை தாதியர்கள் சங்கத்தின் தலைவர் டி.கோகுலராஜ் நெறிப்படுத்தலில் தாதிய பரிபாலகர் பி.ரி.நௌபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக அக்கரைப்பற்று விபுலானந்த சிறுவர் இல்லத்தின் தலைவர் வீ.கைலாயப்பிள்ளை, ஹட்டன் நெசனல் வங்கியின் அக்கரைப்பற்று கிளை முகாமையாளர் டபிள்யூ.எம்.றியாஸ் மற்றும் வைத்தியர்கள், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.

''எமது தாதியர்கள் எமது எதிர்காலம்'' எனும் கருப்பொருளில் சர்வதேச தாதியர் தினம் இம்முறை கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில் சிரேஷ்ட தாதியர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். விசேட பேச்சாளராகக் கலந்து கொண்ட அக்கரைப்பற்று விபுலானந்த சிறுவர் இல்லத்தின் தலைவர் வீ.கைலாயப்பிள்ளை தாதியர்கள் பணிகள் தொடர்பில் உரையாற்றினார்.

அத்தோடு தாதியர்களினால் கவிதை மற்றும் பாடல்கள் பாடப்பட்டதுடன் சபையோரின் பாராட்டையும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com




திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு மாவட்ட செயலகத்தில் வெள்ளிக்கிழமை(12) இடம்பெற்றது. அரசாங்க அதிபர் பி.எச்.என் ஜயவிக்ரம வழிகாட்டலில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள், முப்படை, பொலிஸ், பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (கிண்ணியா செய்தியாளர்)

# மாலைநேர தனியார் வகுப்புகளை நடத்தாமலிருக்க பெற்றோர் கோரிக்கை

**(இஸ்மாயில்புரம் செய்தியாளர்)**

மாலை ஐந்து மணிக்குப் பின்னரான தனியார் வகுப்புகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும் என பெற்றோர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

நாட்டின் சில பகுதிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஆட்கடத்தல் உள்ளிட்ட சம்பவங்களையடுத்து, மாலைநேர வகுப்புகளுக்குச் செல்லும் மாணவிகள் தமது கல்வியைத் தொடர்வதில் தயக்கம் காட்டுவதாகவும் தமது பாதுகாப்பு தொடர்பில் அச்சமடைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும், சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள் முறையான ஏற்பாடுகளைச் செய்யும்வரை தற்போது நடைபெறும் மாலை ஐந்து மணிக்கு பின்னரான சகல தனியார் வகுப்புகளையும் இரத்துச் செய்வதற்கு உள்ளூராட்சி சபை நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமது பிள்ளைகள் எவ்வித தயக்கமுமின்றி கல்வி நடவடிக்கைகளைத் தொடரும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் பெற்றோரினதும் பிள்ளைகளினதும் ஆலோசனைகளுக்கு அமைவாக, பொருத்தமான நேரசூசியினை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனவும் இதேவேளை மாலைநேர வகுப்புகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் நேரடி கண்காணிப்புகளை மேற்கொள்வதுடன் அதுதொடர்பில் தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

# சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி விருதினை பெற்றுக்கொண்ட அல்-அஷ்ரக் மாணவர்கள்




**(பொலிவேரியன் செய்தியாளர்)**

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவர்களான பாக்கியராஜா ருஷாந்தினி மற்றும் என். சாலின் மொஹமட் ஷாஹித் ஆகிய இருவரும் நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தர தேசிய பாடசாலை மாணவிகள் 11 பேரும், சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் வியாழக்கிழமை (11) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து பதக்கமும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண வரலாற்றில் இதற்கு முன் முதன்முறை இவ்விருதைப்பெற்றது அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையாகும். இம்முறை நிந்தவூர் அல்- மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 11 மாணவிகள் ஜனாதிபதி விருதினைப் பெற்றமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில், அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூர் மற்றும் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் ஏ.எல். நிஜாமுதீன் மற்றும் பொறுப்பாசிரியர்களான என்.எம்.இன்ஷாப் ஹசன், அல் - மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியையும் நிந்தவூர் கோட்ட சுற்றாடல் கழகப் பொறுப்பாசிரியையுமான ஹிதாயா சபீக் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

த கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தமிழின படுகொலைக்கு நீதி கோரிய வாகனபவனி

## அம்பாறை வீரமுனையில் ஆரம்பம்





(கனகராசா சரவணன்)

அம்பாறையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரையான தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி படுகொலையை சித்தரிக்கும் உருவம் தாங்கிய வாகனபவனியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சி வீரமுனையில் படுகொலை செய்யப்பட்ட நினைவுத் தூபியில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை(14) ஆரம்பித்தது.

1990ஆம் ஆண்டு அம்பாறை, வீரமுனை கோவிலில் தமிழர்கள் 175 பேர் படுகொலை செய்யப்பட்ட நினைவுத் தூபியில் சுடரேற்றி படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு ஆத்மசாந்திவேண்டி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் வாகனபவனியை ஆரம்பித்தனர்.

வாகனப் பவனியானது மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்குச் சென்று அங்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தியதன் பின்னர் அங்கிருந்து மட்டு. சத்துருக்கொண்டான் படுகொலை செய்யப்பட்ட நினைவுத்தூபிக்கு சென்று அங்கும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தி செங்கலடி வாழைச்சேனை ஊடாக வாகரையை சென்று அங்கிருந்து திருகோணமலையை சென்றடையவுள்ளது.

இன்று திங்கட்கிழமை, திருகோணமலையில் தமிழின படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவு த் தூபிகளுக்குச் சென்று அஞ்சலி செலுத்தி 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது.

# கரையொதுங்கும் நீர்த்தாவரங்களால் மீனவர்கள் பாதிப்பு



(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை கடற்பரப்பில் ஒதுங்கியுள்ள நீர்த்தாவரங்களினால் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை கடற்பரப்பில் மட்டுமல்லாது மூதூர், கிண்ணியா போன்ற இடங்களில் உள்ள கடற்பரப்புகளிலும் நீர்த்தாவரங்கள் சில நாட்களாக கரையொதுங்கிவருகின்றன.

ஆறுகள் மற்றும் குளங்களில் காணப்பட்ட இந்த நீர்த்தாவரங்கள் அண்மைக்காலமாக பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் அள்ளுண்டு மகாவலி கங்கையினூடாக கடலை அடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனால் மீனவர்களது வலைகளில் சிக்குண்டு வலைகள் சேதமடைவதாகவும் மீன்பிடியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த நீர்த்தாவரக் கழிவுகளை இயற்கை பசளை தயாரிக்க பயன்படுத்த முடியும் எனவும் இதற்கான சரியான திட்டத்தை அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் புத்திஜீவிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# போடியார் புலம்பல்!



வடக்கு ஆளுநரும், கிழக்கு ஆளுநரும் பதவி விலக மறுத்துத்தாங்காளாம் எண்டு ஒரு கத உலாவுதெலுவா..? என்னடாப்பா இது புதுக்கதயா இருக்கு நாட்டில உள்ள ஜனாதிபதி நினைத்தால் ஆரையும் ஜனாதிபதியாக நியமிக்கலாம் இந்த ரணில் ஐயாவுக்கு அவங்கமேல் கொண்ட காதல் மாற்ற முடியாமல் இருக்குது எண்டா அந்த ரெண்டு ஆளுநர்களும் ஸ்ரீலங்கா இனவாதிகளோட ஒத்து ஓடுறாங்க எண்டதுதான் மெய்! கிழக்கு பொடிச்சி நரிலிட்ட என்னத்தையோ காட்டி மசக்கிவைச்சிருக்காள் போல

# கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்





(கிரான் செய்தியாளர்)

வலி சுமந்த காலத்தில் உயிர் காத்த உணவு, வரலாற்றை இளைய சந்ததிக்கு கடத்துவோம் எனும் தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை(13) மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடங்களின் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களினால் வீடு வீடாக சென்று சேகரிக்கப்பட்ட அரிசியை கொண்டு 2009 மே மாதம் முள்ளிவாய்க்கால் உணவுக்காக மக்கள் பட்ட துன்பத்தை நினைவுகூரும் நினைவு கஞ்சி அன்றைய நாள் முழுவதுமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மதத்தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், காணாமலாக்கப்பட்டோர் சங்கம் மற்றும் பொது அமைப்புகள், பொது மக்கள் என பலர் இணைந்து கஞ்சியை பகிர்ந்துண்டு வலிசுமந்த நினைவுகளை மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சிகிச்சை பலனின்றி கர்ப்பிணி உயிரிழப்பு

(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை - பாட்டாளிபுரக் கிராமத்தைச் சேர்ந்த இளம் கர்ப்பிணித் தாயொருவர் வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

24 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு சனிக்கிழமை(13) உயிரிழந்துள்ளார். மூதூர் தள வைத்தியசாலையில் விசேட பெண் வைத்திய நிபுணர் குறித்த நாளில் வருகைதராமையால் மிகவும் ஆபத்தான முறையில் குழந்தையினை பிரசவித்ததன் பின்னர் அதீத குருதிப்போக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குழந்தையும் தாயும் திருகோணமலை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் குறித்த பெண்ணின் மரணத்துக்கு நீதி கோரி குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சனிக்கிழமை(13) மாலை கல்முனை புறநகர்ப் பகுதியில் வைத்து ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து 1 கிராம் 850 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கல்முனை 11 பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய குறித்த சந்தேக நபர் கல்முனை தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# தௌபீக் எம்.பி. – இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் சந்திப்பு



(அப்துல்சலாம் யாசீம், கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமௌட் நஸீர் அல்டசான் அல்கதானி ஆகியோருக்கிடையிலான சந்திப்பு சவூதி அரேபியத் தூதரகத்தில் வியாழக்கிழமை (11) இடம்பெற்றது.

சவூதி அரேபியாவுக்கும் இலங்கைக்குமான நீண்டகால உறவு குறித்து இதன்போது தௌபீக் எம்.பி. நினைவுபடுத்தியதுடன் கடந்த காலங்களில் இலங்கை மக்களுக்கு உதவியதற்காக தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

மேலும், இதன்போது, திருகோணமலை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் மீன்பிடி, விவசாயம் என்பன குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இவைகளுக்கு நியாயமான தீர்வுகளைப் பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பதாகவும் அத்தோடு உரியவர்களுக்கு தங்களது பிரச்சினைகளை முன்வைப்பதாகவும் சவூதி அரேபியத் தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

# மின்கட்டண நிலுவையை உடன் செலுத்த அறிவுறுத்து

(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கல்முனை பிரதேச பிரதான மின் பொறியியலாளர் பிரிவில் ஒருமாதம் அல்லது அதற்கு மேற்பட்ட மின் நிலுவைகளைக் கொண்ட அனைத்து மின் பாவனையாளர்களும் தமது நிலுவைகளை உடன் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் மின்துண்டிப்பு இடம்பெறுமெனவும் பொறியியலாளர் ஏ.எல்.ஹைகல் தெரிவித்தார்.

இதேவேளை, மீள் இணைப்பு பெறுவதற்கு தங்களது நிலுவையுடன் மூவாயிரம் ரூபாவும் தாமதக்கொடுப்பனவும் சேர்த்து அறவிடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிலுவைகளை அரச அங்கீகாரம்பெற்ற நம்பகரமான முகவர் நிலையங்களூடாக செலுத்தமுடியுமெனவும் குறிப்பிட்ட அவர், மேலதிக விபரங்களுக்கு 0672229276 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியுமெனவும் மின் பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

# புகையிரதத்தில் மோதி இரு யானைகள் பலி

(கந்தளாய் செய்தியாளர்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹித்துல் ஊற்றுப் பகுதியில் புகையிரதத்தில் காட்டு யானைகள் மோதுண்டதில் இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வன ஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் சனிக்கிழமை (13) இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற இரவு நேர அஞ்சல் புகையிரதத்தில் காட்டு யானைகள் மோதியதியே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதன்போது இரு காட்டு யானைகள் இறந்துள்ளதோடு மற்றொரு யானை காயங்களுடன் காட்டுக்குள் புகுந்துள்ளதாகவும் யானைகள் மோதியதில் இரண்டு மணித்தியாலங்கள் புகையிரதம் பயணிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளத. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வன ஜீவராசி அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# கண்டல் தாவரங்களை பாதுகாக்கும் செயற்றிட்டம்





(மூதூர் செய்தியாளர்)

கண்டல் மீள்காடாக்கம் கண்டல் பாதுகாப்பு எனும் தொனிப்பொருளில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் பிரிட்டிஷ் கவுன்ஸில் முஸ்லிம் எயிட் STRIDE என்பவற்றின் அனுசரணையுடன் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் எக்டிவ் சிடிசன் (பசுமைக்களம்) செயற்றிட்டத்தின், பயனுறுதிமிக்க வகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் SEDR செயற்றிட்டத்தில் எக்டிவ் சிடிசன் - மூதூர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பசுமைக்களம் செயற்பாடு கட்டைப்பறிச்சான் சந்தோசபுர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் 100 கண்டல் தாவரங்கள் நடும் செயற்பாட்டை வெள்ளிக்கிழமை(12) சேனையூர் ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகத்தினர் பழங்குடியின மக்களுடன் இணைந்து மேற்கொண்டனர். அத்தோடு கண்டல் தாவரங்களை பாதுகாப்பதற்காக பசுமை ஒன்றியம் என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக பிரதேசத்தில் கண்டல் மீள்காடாக்கம் செய்தல், அழிவடையும் கண்டல் தாவரங்களை பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன. இதன்போது பசுமைக்களம் உறுப்பினர்களான த.மு.கிசாம், ஜில்பான், ஹரிசங்கர், ததுர்சன், இம்ரான் நசீர் ஆகியோருடன் முஸ்லிம் எயிட் எக்டிவ் சிடிசன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.ரொசிங்டன் மற்றும் மதுசாலினி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கஞ்சாவுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று, பதுர் நகரில் 1050 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவரும் ஹிஜ்ரா வீதியில் 1100 மில்லி கிராம் கஞ்சாவுடன் இன்னுமொருவரும் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர், பொலிஸ் பரிசோதகர் தாஹீர் ஆகியோரின் இணைத்தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசங்களுக்குச் சென்று சந்தேக நபர்களை கைது செய்து நேற்று ஞாயிற்றுக்கிழமை (14) அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# 35ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் நால்வர் கைது

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நொச்சிமுனை பகுதியில் 34ஆயிரத்து 750 மில்லி லீற்றர் கசிப்புடன் பெண்ணொருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம்.சியாம் தெரிவித்தார்.காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் சனிக்கிழமை(13) மாலை மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போது நாவற்குடா,நொச்சிமுனை 5ஆம் குறுக்குத் தெருவில் நீர்நிலையொன்றினுள் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த சட்டவிரோத கசிப்பு கொள்கலன்களை பொலிஸார் மீட்டுள்ளதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# சமஷ்டி அதிகாரப் பகிர்வு தொடர்பான கருத்தாடல்



(மூதூர் செய்தியாளர்)

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக் கிழமை(14) திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம் பெற்றது. பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரை ஒன்றிணைத்து இடம்பெற்ற சமஷ்டி அதிகாரப் பகிர்வு தொடர்பான கருத்தாடலில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் க.லவகுசராசா, உதவி இணைப்பாளர் மதன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.





முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு காந்திபூங்காவில் வெள்ளிக்கிழமை(12) கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.இதன்போது காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு தூபி முன்பாக கஞ்சி தயாரித்து பொதுமக்களுக்கு வழங்கினர். இதன்போது மதகுருமார்கள், சமூக செயற்பாட்டாளர்கள், முன்னாள் எம்.பிக்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(கனகராசா சரவணன்)



**''கருவில் சுமந்து, தோளில் சுமந்து எத்தனை பாரம் இருந்தாலும் தாய்க்கு சுமையே சுகம்...''**

தமது குழந்தையை தோலிலே சுமந்து கொண்டு தொழில்புரியும் மேற்குவங்க தாயொருவர்...

உலகளாவிய ரீதியில் நேற்று (14) அன்னையர்தினம் கொண்டாடப் பட்டது. இந்நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமது ட்விட்டர் பக்கத்தில்,

**''உடலுக்குள் இன்னொரு உயிராய் நம்மைச் சுமந்து, உயிருக்கும் மேலாய் அன்பு செலுத்திடும் அன்னையர் அனைவர்க்கும் அன்னையர் தின வாழ்த்துகள்! அன்பினால் அவனியை நிறைக்கும் தாயின் எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் மதிப்போம், நிறைவேற்றுவோம்!** - எனத் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் - பலஸ்தீன் இடையே போர் நிறுத்தம் அறிவிப்பு



இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 நாட்களாக நீடித்த கடும் யுத்தத்தினிடையே நேற்றுமுன்தினம் இரவு 10 மணி முதல் பலஸ்தீன ஜிஹாத் இயக்கத்தினருக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கும் இடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சமரச முயற்சியில் ஈடுபட்ட எகிப்து அரசு இருதரப்பும் வன்முறை யுத்தத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டுள்ளது.

இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் கலீலி பாட்டினி, தாரிக் இஸெல்தீன், ஜிஹாத் கனாம் ஆகிய 3 முக்கிய தளபதிகளைக் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் காஸா சிட்டியிலும் தெற்குப் பகுதி நகரான ரபோவிலும் செவ்வாய்க்கிழமை அதிகாலை விமானத் தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலில் குறித்த முக்கிய தளபதிகள் மூவர் உட்பட அவர்களது குழந்தைகள், மனைவிகள், அண்டை வீட்டார் 13 பேர் உள்ளிட்ட 33 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ரொக்கெட் குண்டு வீச்சு மூலம் இஸ்ரேலில் இருவர் உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் அங்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ரொக்கெட் சைரன் ஒலி இரவில் கேட்டுக் கொண்டே இருப்பதாக இஸ்ரேல் மக்கள் தெரிவித்தனர். இதனால் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் காஸாவில் பூமிக்கடியிலுள்ள இரண்டு ரொக்கெட் லோஞ்சர் மீது அதிரடியாக குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர்.

# கர்நாடகாவில்




# காங்கிரஸ் வெற்றிக்கொடி; மண் கவ்வியது பா.ஜ.க.

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கிறது. மொத்தமுள்ள 224 தொகுதிகளில் 136 இடங்களை கைப்பற்றி காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றுள்ளது.

224 உறுப்பினர்களைக் கொண்ட கர்நாடக சட்டசபைக்கு கடந்த 10ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் இடம்பெற்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

காங்கிரஸ் கட்சி 223 தொகுதிகளில் போட்டி யிட்டு 135 இடங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. 1999ஆம் ஆண்டுக்கு பின்னர் தற்போது தான் காங்கிரஸ் 132 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றுள்ளது.



கர்நாடகாவில் 34 ஆண்டுகளுக்கு பின்னர் காங்கிரஸ் அதிக தொகுதிகளை கைப்பற்றியுள்ளது. கடைசியாக 1989 தேர்தலில் 178 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. அதன் பின்னர் தற்போது சாதனை வெற்றியை பெற்று முத்திரை பதித்துள்ளது.

ஆளும் பா.ஜ.க. அனைத்து தொகுதியிலும் போட்டியிட்டு 65 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று ஆட்சியை இழந்தது. மதச்சார்பற்ற ஜனதா தளம் 19 தொகுதியை கைப்பற்றியது. சுயேச்சை மற்றும் இதர கட்சிகள் 4 இடங்களில் வென்றன.

ஆட்சியமைக்க 113 இடங்களே தேவை. ஆனால், காங்கிரஸ் 135 தொகுதிகளில் வெற்றிபெற்று பெரும்பான் மையுடன் ஆட்சி அமைக்கிறது. அந்த கட்சிக்கு 42.88 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டா உள்ளிட்டோர் தீவிர பிரசாரம் செய்தும் பா.ஜ.க. கடும் தோல்வியை சந்தித்துள்ளது. 36 சதவீத வாக்குகளைப் பெற்று 65 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இந்த முறை அந்த கட்சி 38 இடங்களை இழந்தது.

எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் இதர கட்சிகளுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை அமைக்கும் கனவிலிருந்த குமாரசாமியின் மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கு ஏமாற்றமே மிஞ்சியது. 13.29 சதவீத வாக்குகளே பெற்றது. இத்தேர்தலில் 18 இடங்களை அந்த கட்சி இழந்தது.

**முதலமைச்சர் யார்?**

இந்நிலையில் கர்நாடகாவின் அடுத்த முதலமைச்சர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. முன்னாள் முதலமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான சித்தராமையாவுக்கும் மாநில காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவக் குமாருக்கும் இடையே கடும் போட்டி நிலவுகின்றது. இரு தரப்பு ஆதரவாளர்களும் முதலமைச்சர் பதவியை வழங்க வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். பெரும்பான்மை எம்.எல்.ஏ.க்கள் யாரை தெரிவு செய்கிறார்களோ அவரே முதமைச்சர் ஆவார்.

இதற்கிடையே காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் இடையே இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு முதலமைச்சர் தெரிவு செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

சித்தராமையாவுக்கும் டி.கே.சிவக்குமாருக்கும் இடையே போட்டி நிலவினாலும் முதலமைச்சரை ஏகமனதாக தெரிவு செய்யவே காங்கிரஸ் மேலிடம் விரும்புகிறது. இது தொடர்பாக மேலிட பார்வையாளர்கள் நேற்றுமுன்தினம் இருவரிடமும் ஆலோசனை மேற்கொண்டனர். இதனால் ஏகமனதாக முதலமைச்சர் தெரிவு செய்யப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே இரு தரப்பு ஆதரவு எம்.எல்.ஏக்களும் தனித்தனியாகவும் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.முதலமைச்சர் தெரிவுக்குப் பின்னர் ஆளுநரை சந்தித்து காங்கிரஸ் ஆட்சியமைக்க உரிமை கோரும். கர்நாடகா புதிய முதலமைச்சர் பதவியேற்பு விழா எதிர்வரும் 17 அல்லது 18ஆம் திகதி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இம்ரான்கான் பிணையில் விடுதலை

## 15வரை கைது செய்ய இடைக்காலத் தடை




பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளதுடன் மே 9ஆம் திகதிக்குப் பின்னர் பதிவான எந்தவொரு வழக்கிலும் மே 17 வரை அவரைக் கைது செய்ய உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடையும் விதித்துள்ளது.

இம்ரான் கான் பிணையில் விடுவிக்கப்பட்ட போதும் பொலிஸார் அவரை வெளியே விட அனுமதிக்கவில்லை. நீதிமன்ற வளாகம் அருகே கடும் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

பாதுகாப்புக் காரணங்களால் இம்ரான் கான் நீதிமன்றத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சுமார் 7 மணி நேரம் தடுத்து நிறுத்தப்பட்டார். இதனால் பொறுமை இழந்த இம்ரான் கான் பொலிஸ் உயர் அதிகாரிக்கு 15 நிமிட கெடு விதித்தார். தம்மை உடனடியாக விடுவிக்காவிட்டால் தாம் கடத்தப்பட்டதாக அறிவிக்கப் போவதாக எச்சரித்தார். இதனையடுத்து அவர் நள்ளிரவு 11 மணியளவில் விடுதலை செய்யப்பட்டார்.

இஸ்லாமாபாத்திலிருந்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அவர் கார் மூலமாக லாகூர் சென்றார். காரில் இருந்தபடியே வீடியோ பதிவை வெளியிட்ட இம்ரான்கான் தம்மை இஸ்லாமாபாத்தை விட்டு வெளியேற விடாமல் தடுக்க இடம்பெற்ற முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

TATA IPL

**இன்றைய போட்டி**

போட்டி இல - 62

குஜராத் டைட்டன்ஸ் எதிர் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்

நேரம் - இரவு 7.30

இடம் - அகமதாபாத்

**விளையாட்டு செய்திகள்**

thamilansports@gmail.com

# உலகக்கிண்ண உதைபந்தாட்ட அனுசரணையாளரானது யுனிலீவர்




அவுஸ்திரேலியா,நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் இடம்பெறும் மகளிர் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அதிகாரப்பூர்வ அனுசரணையாளராக யுனிலீவர் இணைந்துள்ளது.

ரெக்ஸோனா,டோவ்,லைஃப்போய், லக்ஸ் ஆகியவற்றி ன் தயாரிப்பாளரான யுனிலீவர் பீபாவுடன் முதன் முதலாக இணைந்துள்ளது.

2020 இல் தொடங்கப்பட்ட பீபாவின் பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்துடன் யுனிலீவர் ஒத்துழைக்கும். இந்த முயற்சி பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான வாய்ப்புகளை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள பெண்கள் கால்பந்தின் தொடர்ச்சியான வளர்ச்சியை ஆதரிக்கிறது. யுனிலீவர் நிதியுதவி, மனித வளங்கள் மற்றும் பெண்களின் விளையாட்டைச் சுற்றியுள்ள ஆர்வத்தின் எழுச்சியைத் தட்டிக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஆதரவை வழங்கும்.

மகளிர் உலகக் கிண்ணப் போட்டி உலகின் மிகப்பெரிய தனித்த பெண்களுக்கான விளையாட்டு நிகழ்வாக அமைக்கப்பட்டுள்ளது. இது சுமார் இரண்டு பில்லியன் மக்களை சென்றடைகிறது. போட்டியின் 64 போட்டிகளில் 1.5 மில்லியன் ரசிகர்களை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும் பெண்கள் மற்றும் சிறுமிகளை விளையாட்டில் ஈடுபட ஊக்குவிக்க பல வாய்ப்புகளை வழங்குகிறது.

யுனிலீவர் பிராண்டுகளின் தற்போதைய திட்டங்களில் இந்த ஒத்துழைப்பு உருவாக்கப்படும். இது சமூகங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். சமீபத்திய வேலைகளில் Rexonas Breaking Limits திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. இது சமூக விளையாட்டுகளுக்கு நிதியுதவி அளிப்பதுடன் இளைஞர்கள் சுறுசுறுப்பாக இருப்பதற்கான தடைகளை கடக்க உதவுகிறது. டவ் சுயமரியாதை திட்டம் 2004 இல் தொடங்கப்பட்டதில் இருந்து அடுத்த தலைமுறை பெண்களில் உடல் நம்பிக்கையை ஊக்குவித்து வருகிறது. இன்றுவரை 94 மில்லியன் இளைஞர்களை சென்றடைந்துள்ளது.

எதிர்காலத்தில் பீபா ரசிகர்களுக்கு நேரடியாக தனிப்பட்ட பராமரிப்பு பொருட்கள் அடங்கிய மொத்தம் 80,000 பரிசுப் பொதிகளை வழங்க யுனிலீவர் திட்டமிட்டுள்ளது.

# மருந்து விற்பனைக்கு எதிராக சச்சின் புகார்




பிரபலங்களின் பெயர்களைப் பயன்படுத்தி மார்க்கெட்டிங் செய்வது சட்டப்படி குற்றமாகும். இந்நிலையில் சமீபகாலங்களில் பிரபலங்களின் பெயர்கள் இப்படி தவறாக பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் அடிக்கடி எழுந்து வருகிறது. இந்நிலையில் தற்போது மும்பையில் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் பெயரில் சட்டவிரோதமாக ஹெர்பல் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சச்சின் டெண்டுல்கர் பெயரைப் பயன்படுத்தி www.sachinhealth.in என்ற வெப்சைட் மூலம் ஹெர்பல் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வந்தன. ஆனால் இந்த விற்பனைக்கு சச்சின் டெண்டுல்கரிடம் முறைப்படி அனுமதி பெறப்படவில்லை. சச்சின் டெண்டுல்கர் பெயரைப் பயன்படுத்தி சோஷியல் மீடியாவில் விளம்பரமும் செய்யப்பட்டது. உடல், தோல், வலி பிரச்சினைகளுக்கான மருந்துகள் அந்த இணையத் தளத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இதில் முறைகேட்டின் உச்சத்துக்கே செல்வது போல் மருந்துகளை வாங்குபவர்களுக்கு சச்சின் டெண்டுல்கர் கையெழுத்திட்ட டி-சர்ட் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும் என்று விளம்பரப்படுத்தப்பட்டது. இது சச்சின் டெண்டுல்கரின் உதவியாளர் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதை அறிந்த சச்சின் கடும் அதிர்ச்சியடைந்தார். இதனைத்தொடர்ந்து, இச்சம்பவம் குறித்து சச்சின் தரப்பில் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விவகாரத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்திருக்கின்றனர். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டிருக்கிறது.

உடலில் அந்த ஆயிலை ஸ்பிரே செய்வதன் மூலம் உடல் கொழுப்பு கரையும் என்று இரண்டு வெப்சைட்டுகளில் விளம்பரம் செய்தனர். அதன் விலை 899 ரூபாய் என்று நவீன் என்பவர் சோஷியல் மீடியாவில் விளம்பரம் கொடுத்திருந்தார். தனக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில், தனது பெயர் பயன்படுத்தப்படுவதாக சச்சின் தன்னுடைய புகார் மனுவில் குறிப்பிட்டிருக்கிறார். இது கிரிக்கெட் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பங்களாதேஷுக்கு எதிரான ரி 20 தொடரை வென்றது இலங்கை




பங்களாதேஷ், இலங்கை ஆகியவற்றுக்கிடையே இடம்பெற்ற மூன்றாவது ரி20 போட்டியில் 44 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை தொடரைக் கைப்பற்றியது. முதல் இரண்டு போட்டிகளில் பங்களாதேஷும் இலங்கையும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றன.நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் மூன்று விக்கெட்களை இழந்து 158 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 0 ஓவர்களைல் 7 விக்கெட்களை இழந்து 114 ஓட்டங்கள் எடுத்தது.பத்தாவது ஓவரில் இலங்கை 3 விக்கெட்களை இழந்து 56 ஓட்டங்கள் எடுத்தது. நான்காவது விக்கெட்டுக்கு இணைந்த ஹர்ஷித சமரவிக்ரம, நிலக்ஷி ஜோடி இலங்கையை மீட்டெடுத்தது. ஹர்ஷிதா 42 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 51 ஓட்டங்கள் எடுத்தார். 33 வயதான நிலாக்ஷி 39 பந்துகளில் 4 பவுண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்கள் எடுத்தார்.

159 எனும் ஓட்ட இலக்குடன் விளையாடிய பங்களாதேஷ் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 114 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந் தது.

இலங்கை அணி 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்துள்ளது. நிலாக்ஷி டி சில்வா - 63, ஹர்ஷித சமரவிக்ரம - 51, சாமரி அத்தபத்து - 32, பாஹிமா கதுன் 31/1

பங்களா தேஷ் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 114 ஓட்டங்கள் எடுத்தது. சோபனா மோஸ்டரி - 30, நிகர் சுல்தானா - 31, உதேஷிகா பிரபோதனி - 17/2, இனோகா ரணவீர - 17/2.

பங்களாதேஷ் பெண்கள் கிரிக்கெட் அணியின் இலங்கை சுற்றுப்பயணம் 2023

Sri Lanka Cricket

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்

Dialog

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7